NEW TRINCO STATIONERS
இலவச ரிசீவர் – பதிவு செய்யும் திறனுடன்
1, 3, 6, 12
மாதங்களுக்கான சன் டிரக்ட்
மேலும் அனைத்து வகையான செய்மதி தொலைக்காட்சி சேவைகளும்

026 2223071, 077 7697184

அறைவு 01 இயம் 52 July 20 -26, 2013

# மலைமுரசு
MALAIMURASU
வார இதழ்

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 25.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 16 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை



# 500 மில்லியன் விசேட நிதி

தனியான வீடமைப்பு அதிகார சபை

கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்திக்காக மேலும் 500 மில்லியன் ரூபாய்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை கிழக்கு மாகாண அமைச்சரவை முன்னெடுத்துள்ளது. கடந்த 08ம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டத்தில் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் அவர்களால் முன்மொழியப்பட்ட விசேட நிதிக்கான தீர்மானத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களினதும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் நோக்குடன் இந் நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை முதலமைச்சர் முன்னெடுக்கவுள்ளார்.

11

## மூதூர் கொலைச் சாட்சிகளின் பட்டியல்
# தயாராகின்றது





# திருமலை வளாக நிர்வாகம் யாரிடம்?



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கீழ் தற்போது வரை இயங்கி வந்த திருகோணமலை வளாகத்தின் நிர்வாகத்தை இராசரட்டைப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருவதாக அறியக் கிடைக்கின்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கீழ் திருகோணமலை வளாகம் கடந்த பல வருடங்களாக இயங்கி வருகின்றது ஆரம்பத்தில் திருமலை நகரப் பகுதியில் இயங்கி வந்த இவ்வளாகம் பலரது அயராத முயற்சியால் கோணேசபுரியில் தனியான வளாகமாக அமைக்கப்பட்டது. இத் திருமலை வளாகத்தை இடைநடுவில் மூடுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தற்போது திருமலை வளாகத்தை இராசரட்டைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதானது அவ் வளாகத்தின் தமிழ்ப்பண்பை முற்றிலும் குலைத்து விடும் செயற்பாடாக இருப்பதுடன் அதற்குத் தமிழர்களே துணை போவது

(16ம் பக்கம்)



சி.வி. யின் நியமனத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரதேச அரசியலும் பிராந்திய அரசியலும்

பக்கம் 04

இலவச ரீசார்ஜ் வீசா
Sun direct / Video con / Dish tv ஆகியவற்றுக்கு Recharge செய்து 75 ரூபாவை கழிவாக பெறுங்கள் இத்துண்டை வெட்டியெடுத்து TRINCO STATIONERS நிறுவனத்திடம் Recharge செய்யும் போது 75/= கழிவை அனுபவிக்கலாம்


எங்கிருந்தாலும் Recharge உடனடியாக-
New Trinco Stationers
026-2223071 / 0777697184

மலைமுரசு பத்திரிகையில் பணியாற்ற வடிவமைப்பாளர் தேவை.
உடனே தொடர்புகொள்ளவும்.
0777555738
Photoshop, Pagemaker
தெரிந்திருத்தல் நன்று

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU



159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 - 0777555738


## வணக்கம்

### நல்லிணக்கம்!

கடந்த வாரம் வன்னி நோக்கிப் பயணிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. தனியார் பேரூந்தில் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் போகும் போது இடை நடுவே ஏறிய ஒருவர் தான் பயணச் சீட்டைப் பெறத் தேவையில்லை என்று வண்டி நடத்துனருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடத் தொடங்கினார். அவ்வாறு யார் வாய்த்தர்க்கம் செய்யக்கூடியவர்கள் என்று உங்களுக்குத் தெரியும்.

எனினும் உறுதியான நடத்துனர் பேரூந்தை நிறுத்தி குறிப்பிட்டவரை இறக்கி விட்டுச் சென்றுவிட்டார்.

இந்த நடவடிக்கையானது ஒற்றுமையான வாழ்க்கைக்கு இன்னும் பல காலங்கள் தேவைப்படும் என்பதைத்தான் உணர்த்தி விட்டுச் சென்றது.

போரிடும் காலப்பகுதியில் களத் துருப்புக்களின் மன நிலையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதே வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் என்பது பல களங்களை ஆய்வு செய்தவர்களின் முடிவு. போரிடும் பொழுது ஆயுத பலத்தினால் வெற்றி பெற வேண்டுமாயின் அசாத்திய ஆயுத பலம் கொண்டிருக்க வேண்டும். ஆனாலும் அந்த அசாத்திய ஆயுத பலத்தினால் குலைக்க நினைக்கும் எதிரியின் பலம் எது தெரியுமா? மனபலம்தான்.

உதாரணமாக இரண்டாம் உலகப் போரின்போது அணு ஆயுதத்தைப் பிரயோகித்த அமெரிக்கா அசாத்திய ஆயுத பலமாக அதனைப் பாவித்தாலும் அவ் வெடிப்பு ஜப்பானியர்களின் உளத்திறனைத் தான் உருக்கியிருந்தது.

போரோய்ந்த பின் முதலில் கட்டியெழுப்பட்டது ஜப்பானியர்களின் மனோதிடமே. இன்றைய உலக அரங்கில் சீன ஆதிக்கத்திலிருந்து ஜப்பானியக் கடலெல்லையைப் பாதுகாப்பதற்கு அமெரிக்காவுடன் நேசமாக இருக்கின்றது ஜப்பான்.

இவ்விரு நாடுகளின் மனித மனங்களில் ஒருவர் மீது ஒருவர் எவ்வாறு நேசம் கொள்ளக் கூடிய சூழல் உருவாகியிருக்கின்றது எனப் பார்த்தால் எந்தத் துருப்புக்கள் களச் சண்டையில் ஈடுபட்டார்களோ அந்தத் துருப்பினரின் மனநிலையை போரோய்ந்த பின் ஆதிக்க வெறியிலிருந்தும், அடக்குமுறை தகிப்பிலிருந்தும் அந்தந்த நாடுகள் மாற்றி விட்டன. அதனைத்தான் போரியல் வல்லுனர்கள் "யுத்தத்தின் பின்னரான மனநிலை மாற்றத் தேவை" (Post war syndrome need) எனக் குறிக்கின்றனர்.

முப்பதாண்டு கால யுத்தத்தின் பின் மூன்று ஆண்டுகளுக்குள் ஆதிக்க வெறியிலிருந்தும், அடக்குமுறை தகிப்பிலிருந்தும் போரிலீடுபட்ட தரப்புக்கள் இரண்டையும் வெளியில் எடுக்க வேண்டிய அடிப்படை விடயங்களில் அரசு கவனம் செலுத்தினால் மட்டுமே உண்மையான நல்லிணக்கம் உருவாகும் என்பதில் வேறு கதைக்கே இடமில்லை.

நல்லிணக்கம் என்பது இந்தியாவிலிருந்தும் தென்னாபிரிக்காவிலிருந்தும் வந்திறங்காது.

அது பயணச் சீட்டைப் பெற்றுப் பயணிக்கும் பண்பிலிருந்து தான் ஆரம்பிக்கும்.

## சொகுசுவான் யானையுடன் மோதியது ஐவர் காயம்



கிண்ணியா சூரங்கல்லில் இருந்து சொல்லப்படுகின்றது. இவ் கொழும்புக்கு புறப்பட்ட சொகுசு வான் ஹபரனை காட்டுப்பகுதியில் விபத்துக்குள்ளாகியது. விபத்துச்சம்பவம் செவ்வாய்க்கிழமை (16.07.2013) இரவு இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் வண்டி ஓட்டுனர் உட்பட 5 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

நடு இரவில் சாலையைக் கடக்க முயன்ற யானையைத் திடீரென எதிர் கொண்ட வண்டிச்சாரதியால் வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதே விபத்திற்குக் காரணம் எனச் அனைவரும் கந்தளாய் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தொடரூந்தில் மோதுண்டு பெண் பலி

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை ரயிலில் மோதி இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாகக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் ஐயன்கேணி ரகுநாதன் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய ராசலிங்கம் காயத்திரி என்பவரே உயிரிழந்துள்ளதாக அவரது உறவினர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர்.

குறித்த இளம்பெண் அவ்வப்போது மனநிலை பாதிப்பிற்குள்ளாகுபவர் என்றும் இதற்கு முன்னரும் இவ்வாறு ரயிலில் மோதுண்டு காயங்களுடன் உயிர் தப்பியவர் என்றும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

## பெருமானின் படத்தால் கைதாகிய பொலிவியர்

அணிந்திருந்த மேல்சட்டையில் புத்தர் பெருமானின் உருவம் பொறிக்கப் பட்டிருந்ததால் திருகோணமலை புகையிர நிலையத்தில் வைத்து பொலிவிய நாட்டவர் இருவர் புகையிரத காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த (16) செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

புகையிரத நிலையத்தில் பயணிக்கவிருந்த பெரும்பான்மை இன மக்களின் கோரிக்கையை அடுத்தே இவர்கள் இருவரும் காவல் துறையினரினால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

திருகோணமலை புகையிரத நிலையித்தில் பொலிவியா நாட்டைச் சேர்ந்த இளைஞன் தனது தோழியுடன்



கொழும்பு செல்வதற்காக காத்திருந்துள்ளார். அவர்கள் இருவரும் அணிந்திருந்த மேல்சட்டையில் புத்தர் பெருமானின் உருவம் பொறிக்கப் பட்டிருந்தது.


இதனை அவதானித்த சக பிரயாணிகள் இவர்களிடம் சென்று அணிந்திருந்த மேல்சட்டையினை கழற்றுமாறு கேட்டுக்கொண்டனர். மொழி புரியாத இந்த வெளிநாட்டவர்களால் இதனை செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் அங்கு குழுமியவர்கள் அவர்களின் செயற்பாட்டிற்கு எதிராக கோசம் எழுப்பினர். சம்பவத்தையடுத்து புகையிரத நிலைய காவல்துறை அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டதை தொடர்ந்து மேல்சட்டை கழற்றப்பட்டதுடன், வெளிநாட்டவர்கள் இருவரும் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

## தவறி விழுந்த மீனவர் ஸ்தலத்திலேயே பலி

சீனக்குடா கொட்பே மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரோலார் மீனவ படகில் இருந்த ஒருவர் கடலில் விழுந்ததில் உயிரிழந்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை (16) இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் பலியானவரின் சடலம் புதன்கிழமை காலை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. குறித்த படகை இயக்குபவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக காவல்துறையினர் குறிப்பிட்டுள்ளனர். மடம்வெல்ல, தேவிநுவர பகுதியைச் சேர்ந்த 44 வயதான நபரொருவரே சம்பவத்தில் பலியாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

## வாலிபர் தூக்கில் தொங்கினார்



கிண்ணியா பைசல் நகரில் வாலிபர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டவர் மதீனா நகரைச் சேர்ந்த முமைத் நியாஸ், (வயது 32) என காவல்துறையினர் தெரிவித்தனர்.

கடன் தொல்லை மற்றும் தான் விரும்பிய பெண்ணை மணக்க முடியாமை போன்றன காரணமாகவே அவர் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. தான் முன்னர் திருமணம் முடித்து பிரிந்த பின் வேறு ஒரு பெண்ணை திருமணம் முடிக்க முற்பட்ட வேளையில் ஏற்பட்ட தகராறு காரணமாகவும் மனவுளைச்சலுக்கு ஆளான நிலையிலே அவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகின்றது. திருகோணமலை பொது வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்ட பின்னர் உறுப்பினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்



15.02.1934 - 17.07.2013

எமது முன்னாள் அதிபர்

# அ. சிவலோகநாதன்

பொட்ஸ்வானா நாட்டில் 17.07.2013ல்

அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னாருக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

கல்லூரிச்சமூகம்

தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலைப்பாம்பு வளர்த்த பெண்மணி கைது



கடந்த வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு நொச்சிமுனை கலைமகள் வீதியிலுள்ள வீடொன்றிலேயே அருகி வரும் ஆமை இனத்தைச் சேர்ந்த ஐந்து ஆமைகளும் சுமார் 12வருடமாக வளர்க்கப்பட்டு வந்த சுமார் 9அடி நீளமான பாரிய மலைப்பாம்பு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வனவிலங்கு திணைககள அதிகாரிகளும் காத்தான்குடி காவல்துறையினரும் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி காவல்துறை பிரிவிற்கு உட்பட்ட மட்டக்களப்பு நொச்சிமுனை கலைமகள் வீதியிலுள்ள வீடொன்றில் வைத்து சட்டவிரோதமாக வளர்க்கப்பட்ட ஐந்து ஆமைகள் மற்றும சுமார் 9அடி நீளமுள்ள மலைப்பாம்பொன்றையும் கைப்பற்றி உள்ளதாக காத்தான்குடி காவல்துறையினர் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் குமாரியிடம் கேட்ட போது, நான் பல வருடங்களாக கோழி மற்றும் இவற்றை வளர்த்து வருவதாகவும் இவற்றைப் பார்வையிடுவதற்கு நிறையப் பேர் வீட்டுக்கு வருவதாகவும் இப்படி வளர்ப்பது சட்டவிரோதமானது என்பது தனக்கு தெரியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். தொடர்பில் விசாரணையை மேற்கொள்வற்காக தலத்திற்கு விஜயம் செய்த மட்டக்களப்பு மாவட்ட பிரதி காவல் மா அதிபர் வி.இந்திரன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு உத்தரவிட்டார்.

## கல்வித்திணைக்கள ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் பாராட்டு விழா

வடக்கு கிழக்கு மாகாண கல்வி திணைக்கள ஊழியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் 2011, 2012ம் வருடங்களில் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வு ஒன்றினை நடாத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை 13.07.2013 காலை 9.00 மணிக்கு திருகோணமலை பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது.

64 மாணவர்கள் இவ்வாறு பாராட்டைப் பெற்றனர். இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 49 மாணவர்களும் பாராட்டுப் பெற்றனர். சித்திபெற்ற மாணவர்களுக்கு தங்கப்பதக்கத்துடன் 2500.00 ரூபா வைப்பிடப்பட்ட செமிப்பு புத்தகங்களும். 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கத்துடன் 1500.00 'ரூபா வைப்பிடப்பட்ட சேமிப்புப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

மேலும் இவர்களுடன் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான 15 அங்கத்தவர்களின் பிள்ளைகளும் கௌரவிக்கப்பட்டனர்.

# மக்கள் முரசு

-கடந்தவாரம் மலைமுரசில் வெளியான "பாலையூற்றானின்" - மத்திய வீதியின் அகலிப்பால் சொத்திழக்கும் மக்கள் என்ற கட்டுரை தொடர்பான கடிதம் -

சென்றவார மலைமுரசில் "பாலையூற்றான்" என்பவரால் எழுதப்பட்ட ஆக்கத்தின் ஊடாக திருகோணமலை நகரசபையின் நடவடிக்கை தெரியவந்தது. சர்ச்சைக்குரிய வீதியை சார்ந்தவர்களில் 99 வீதமானோர் தமிழர்கள். அவர்கள் அனைவரும் இன்று நகரசபையை ஆட்சிசெய்யும் கட்சியை அன்றும் இன்றும் ஆதரிப்பவர்கள் அவர்களுக்கா இந்தக் கதி?

திருகோணமலை நகரசபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மாத்திரம் பல பிரசித்த பத்திரிகைகள் கட்டமிட்டு காட்டியதே தவிர அங்கு தற்பொழுது எழுந்துள்ள சர்ச்சையை பற்றியும், அவ் விவகாரம் நீதிமன்றம் சென்றமை பற்றியும் குறித்த பிரசித்த பத்திரிகைகள் சுட்டிக்காட்ட தவறியமை குறித்து பல வினாக்கள் எனக்கும் அங்குள்ள மக்கள் மத்தியிலும் எழுந்துள்ளன.


அச்சு ஊடகங்களோ, இலத்திரனியல் ஊடகங்களோ மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை வெளிக்கொணர்வு செய்வதில் முதலிடமளிக்க வேண்டியமையை யாவரும் அறிந்ததே.

ஆனால் பிரதான வீதி அகலிப்பு விடயத்தில் ஏற்பட்ட பிணக்கு தொடர்பாக குறித்த பத்திரிகைகள் ஏன் மௌனம் சாதித்தார்களோ தெரியவில்லை. பல சிங்கள மொழி ஊடகங்கள் நாட்டின் சிங்களப்பகுதி மக்களின் பலதரப்பட்ட பிரச்சனைகளை வெளிக்கொணர்வு செய்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அழுத்தம் கொடுத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கிவருவதை நாம் அறிவோம். ஆனால் வீதி அகலிப்பு விடயத்தில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் நடந்து கொண்ட விதம் பல சந்தேகங்களை உருவாக்கியுள்ளன. குறித்த விடயத்திற்கு முக்கியத்துவமளிக்க தவறினார்களா? அல்லது சம்பந்தப்பட்ட ஒரு சாராரினது கெஞ்சுதலுக்கு அடிபணிந்தார்களா? தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் ஊடகவியலாளர்களை கௌரவித்து பொன்னாடை போர்த்தி விருது வழங்கியிருந்தால் குறித்த விடயம் முன்பக்கத்தில் கட்டமிடப்பட்டு பிரசுரிப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்கும் என சிலர் கூறும் அபிப்பிராயங்களையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

வீதி அகலிப்பு போன்ற மேம்பாட்டு நடவடிக்கைகள் நகரின் அழகிற்கு இன்றியமையாதவைகள் மாத்திரமல்ல மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதிலும் கூட நகரசபையின் நடவடிக்கைகள் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டமை நூறு வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரிய சொத்துக்களை மக்கள் இழக்கும் நிலை, நீதி கோரி நீதிமன்றம் சென்றமை, நகரசபைத் தலைவரால் நட்ட ஈடு வழங்க மறுக்கப்பட்டமை, இவை அனைத்தும் "பாலையூற்றானின்" பேனாவிலிருந்து மாத்திரம் வெளிவந்திருந்தமையை மனித அபிமானத்தை நேசிக்கும் அனைவரும் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

- துட்டகைமுனு -



## 07 மாத "கோமா" வின் பின் பெண் மரணம்

கிண்ணியா தளவைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட பின் நினைவற்ற நிலையிலிருந்த கர்ப்பிணித்தாய் கடந்த புதன்கிழமை திருகோணமலை பொது வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

குட்டிக்கராச்சியைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தாயான கனூன் (வயது43) என்பவரே கடந்த புதன்கிழமை காலை 10 மணியளவில் உயிரிந்துள்ளார்.

இவர் 2012.12.28 ஆம் திகதி தனது ஏழாவது பிள்ளையை பிரசவிப்பதற்காக கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப் பட்ட அவர் அறுவைச் சிகிச்சையின் பின் நினைவிழந்த நிலையை அடைந்த இவர், மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி முதலான வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப் பட்டபோதும் அங்கும் பலன் ஏற்படாததை அடுத்து மீண்டும் திருகோணமலைப் பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஏற்கெனவே 6 பிள்ளைகளையும் எவ்வித சத்திரசிகிச்சையுமின்றி சுகப் பிரசவமாகவே பெற்றெடுத்துள்ளார்.

இதற்கிடையில் சத்திரசிகிச்சையை மேற்கொண்ட நான்கு வைத்தியர்களுக்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன என தெரிகின்றது.. இவ்வாறு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வரும் வேளையில், சுமார் 7 மாதங்களின் பின்னர் இப்பெண் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் திருகோணமலை பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.


## ஏமாற்றும் கூடிபைட்டர்கள்;

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஈரணைக்குளத்தில் உண்பதற்கு உகந்ததற்ற பைற்றர் மீனினமானது மிகவும் அதிகளவிலே வலைகளில் பிடிபடுவதால் தாங்கள் பெரும் சிரமத்தினை எதிர் கொள்வதாக மீனவர்கள் தெரிவிக்கின்றார்கள். மீன் பிடியில் ஈடுபட்டுள்ள உள்ளூர் மீனவர்கள் அதிகளவிலான பைற்றர் ரக மீன்களை பிடித்து வருகிறார்கள். பைற்றர்களைப் பாதுகாப்பது தொடர்பில் ஆராய பிரதேச செயலாளர் உதயசிறிதர் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர் கங்காதரன் ஆகியோர் குளத்திற்கு சென்று மீனவர்களுடன் கலந்துரையாடியுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.வி யின் நியமனத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரதேச அரசியலும் பிராந்திய அரசியலும்

மாயன்



பிரதேச அரசியலும் பிராந்திய அரசியலும் முரண்பட்டுக் கிடக்கும் முனையொன்றிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் (த.தே.கூ) வடமாகாண சபைத் தேர்தல் முதன்மை வேட்பாளராக உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தேர்வாகியுள்ளார்.

இந் நியமனம் பிரதேச அரசியலில் குறிப்பிடத்தக்களவு நெருக்கடி நிலையினை ஏற்படுத்தியுள்ளது.

" தத்துவார்த்தத் தலைவரை நியமித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் செயற்படு தலைவர்களுடன் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது"

இவரது நியமனத்திற்கு எதிராக பிரதான கட்சியாக த.தே.கூ விற்குள் இருக்கும் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

அப் போர்க்கொடிகளுள் ஒன்றாக தமிழரசுக் கட்சியின் திருமலை மாவட்டத்தின் நீண்டகால உறுப்பினர்கள் பலர் இந் நியமனத்தில் தமக்கிருக்கும் அதிருப்தியை வெளியிட்டு கடிதமொன்றை தமிழரசுக் கட்சித் தலைமைக்கு அனுப்பியுள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறே ஏனைய மாவட்டங்களிலிருந்தும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித் துள்ளனர்.

கட்சியின் மிக நீண்ட கால உறுப்பினர்களைக் கருத்திற் கொள்ளாமல் தேர்தல்கள் வரும்போது புதியவர்களை இறக்குமதி செய்வதே த.தே.கூ வின் வேலையாகப் போய்விட்டது என அவர்கள் குறைப்பட்டுக் கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

பிரதேச அரசியலில் பெரும் நெருக்கடியை இங்குதான் த.தே.கூ எதிர்கொள்கின்றது. சரியான படிமுறைத் தலைமைத்துவத்தினை வளர்க்காத அரசியல் அமைப்பொன்று எதிர்கொள்ளும் நெருக்கடியே இது. அதாவது நீண்டகாலப் பார்வையின்றி தமிழரசுக் கட்சியும் த.தே.கூவும் இயங்கி வருவதாலேயே இந்நிலை தோன்றியுள்ளது.

ஒரு அரசியல் அமைப்பை எடுத்துக் கொண்டால் அதற்குத் தத்துவார்த்தத் தலைவர்களாகச் சிலரும், செயற்படு தலைவர்களாகச் சிலரும், தத்துவார்த்தத் துடன் செயற்படு தலைவர்களாகச் சிலரும் தலைமைத் துவப் பண்புகளுடன் இருப்பது நியதியாகும்.

இங்கு தத்துவார்த்தத் தலைவர்கள் கட்சியின் கட்டுமானம், நீண்டகால இலக்கு போன்றவற்றில் குறியாக இருப்பதால் அவர்கள் மக்கள் மத்தியில் மதிப்புக்குரியவராக இருப்பவரே அன்றி ஒரு அரசியற் தலைவருக்கான மக்கள் விரும்பும் பண்புகள் அற்றவராக இருப்பர்.

மாறாக செயற்படு தலைவர் மக்கள் மத்தியில் சென்று வேலைகளைச் செய்வதுடன் தனது சாகச அரசியல் நடவடிக்கைகள் ஊடாக மக்கள் மனங்கவர் தலைவர்களாக இருப்பர்.

இவையிரண்டும் பொருந்திய வெகு சிலரே அரசியற் கட்சிகளின் தலைமைப்பதவிகளில் இருக்கின்றார்.

தற்போது எழுந்துள்ள பிரதேச அரசியல் நெருக்கடியானது முதலிருவகைப்பட்ட அரசியல் தலைமைத்துவப் பண்புகளுக் கிடையான முரண்பாடாகவே முன்னெழுந்துள்ளது.

" நந்திக்கடல் வரை எந்த எதிர்பார்ப்புடன் இருந்து தமிழினம் அழிந்ததோ அதே எதிர்பார்ப்பில் இருந்து த.தே.கூ. வும் அழிந்து விடக்கூடாது"

வட மாகாணசபைத் தேர்தலில் தலைமை வேட்பாளராகத் தத்துவார்த்தத் தலைவர் ஒருவரை நியமித்துள்ள த.தே.கூ அவ்வமைப்பின் செயற்படு தலைவர்களுடன் முரண்பாட்டை உருவாக்கியுள்ளது.

செயற்படு தலைவர்களே மக்களுடன் நெருக்கமாகியவர்கள். நீண்டநாளைய அங்கத்தவர்கள். அவர்களில் ஒருவரை நியமிக்காதது அவர்களிடையே வருத்தத்தை தோற்றுவித்திருப்பதுடன் அவர்களை அம் முடிவுக்கு எதிராக இரகசிய நடவடிக்கைகளையும் எடுக்க ஊக்குவிக்கின்றது.

இங்கு தான் த.தே.கூ வின் நீண்டகாலப் பார்வையற்ற செயற்பாடு புலனாகின்றது. ஒரு தத்துவார்த்தத் தலைவரைப் புதிதாக தேர்தலுக்கு நியமனம் செய்வதை ஏன் கடைசி வரை த.தே.கூ திட்டமிடாமல் இருக்கின்றது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

அல்லது மூன்றாவது வெளிச் சக்தியொன்று சொல்லும் ஒருவரைப் போடுவதற்காகக் கடைசி நிமிடம் வரை த.தே.கூ காத்திருந்ததா? என்னும் சந்தேகமும் இங்கு எழுகின்றது. அவ் வெளிச்சக்தியிடம் சி.வி யின் பெயர் பிரேரிக்கப்பட்டு அவர்களது முடிவு கடைசி நிமிடத்தில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குக் கிடைத்துள்ளதா?

இவ்வாறான கடைசி நேரக் காத்திருப்பும் அதன் போதான முடிவுகளும் எம்மை அழிவிற்கிட்டுச் சென்றிருப்பது இது தான் முதற் தடவையல்ல.

நந்திக்கடல் வரை எந்த எதிர்பார்ப்புடனிருந்து தமிழினம் அழிந்ததோ அதே எதிர்பார்ப்பிலிருந்து த.தே.கூவும் அழிந்துவிட கூடாது.

இனி இந் நியமனத்தின் ஊடாக பிராந்திய அரசியல் நிலையினை எடுத்து நோக்கினால், அது இரண்டு முக்கிய நன்மைகளைக் குறிவைத்துச் செய்யப்பட்டதாகவே இருக்கின்றது.

முதலாவதாக த.தே.கூ வின் மீது பூசப்பட்ட புலிச்சாயத்தை நீர்த்துப் போகச் செய்யாமலே வைத்திருப்பதில் இலங்கை அரசு வெற்றி கண்டுள்ளது. எனவே த.தே.கூ அரசை எதிர்த்துச் செய்யும் பிரசாரங்களை "நாட்டைப் பிளவுபடுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள்" என்றே அரச பிரசார பீரங்கிகள் முழங்கித் தீர்ப்பதால் த.தே.கூ பிரசார வீரியம் குறைகின்றது. எனவே த.தே.கூ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட காலப்பகுதியில் த.தே.கூ வில் அங்கம் வகிக்காத ஒருவரினை முதலமைச்சர் ஆக்கினால் அவரது வாக்கு எவ்வித சாயத்தையும் கொண்டிருக்காது என்பதுடன் அவ்வாறு சாயம் பூசப்பட்ட கண்ணோட்டத்தை கொண்டிருப் பவர்களுக்கு அவரது வாக்கில் சாயம் இல்லை என்பதான கருத்தையும் உருவாகிவிடும்.

எனினும் இத்திட்டத்தை புரிந்து கொண்டுள்ள பேரினவாத அரசின் இனவாத பீரங்கியொன்று "தேசத்தின் குரல் அன்டன் பாலசிங்கத்தின் அதே நிலைப்பாட்டையே சி.வி.யும் கொண்டிருக்கிறார் என வெடிக்கத் தொடங்கியுள்ளமை இங்கு குறிக்கப்பாலதே.

அடுத்து சி.வி. யின் கடந்தகாலம் நீதித் துறையின் உயர் நியமனங்களுள் ஒன்றான உயர் நீதிமன்ற நீதியரசர் நியமனமாகும்.

இக்காலப்பகுதியில் அரசுடனும் சனாதிபதி போன்றோருடனும் தொழில் தொடர்புகளைப் பேணியிருக்க வேண்டும். அவ்வாறானதொரு நீதியரசர் அழுத்தம் மிக்க பதவியொன்றில், அதிகாரம் வாய்ந்த ஆளுநர் பதவியால் கட்டுப்படுத்தப்பட்டு மக்கள் நடவடிக்கைகள் ஈடுபடும் போது எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக பேசும் ஒவ்வொரு வார்த்தையும் சத்தியத்தன்மை பொதிந்திருக்கும் என்பதை யாவரும் உணர்வர் எனும் எதிர்பார்ப்பும், அவ்வாறான வாக்குச் சுத்தம் கொண்ட ஒருவரால் அனைத்துலகத் தொடர்புகளை மிக வலிதாகப் பேண முடியும் என்பதையும் த.தே.கூ எதிர்பார்த்திருக்கலாம்.

ஏனெனில் மேற்போந்த இரு காரணிகளையும் கொண்ட ஒருவரையே பிராந்திய அரசியல் தேவைப்படுத்துகின்றது என்பது வெளிப்படையானதே.

ஆசிய வல்லரசுகளுள் ஒன்றான சீனாவுடன் த.தே.கூ உறவுகள் எதனையும் உருவாக்க வேண்டுமாயின் அதன் முதற்படியாக சிவியின் முதலமைச்சர் வேட்பாளர் நியமனத்தைக் கருதமுடியும்.

எனவே பிரதேச அரசியலில் எதிர்ப்பலைகளை எவ்வாறேனும் சமாளிக்க முடியும் என்ற திடமான நம்பிக்கையாலேயே பிராந்திய அரசியற் சக்திகளைக் குறிவைத்து த.தே.கூ இந்நியமனத்தைச் செய்துள்ளது என்பது தெளிவாகின்றது.



" அட்டன் பாலசிங்கத்தின் மறுஅவதாரமே விக்னேஸ்வரன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசமுரசு

## பெண் காவல்துறை பதவியுயர்வுக்கு உயரம் தடையல்ல - மீயுயர் நீதிமன்றம்

காவல்துறையில் வழங்கப்படும் பதவியுயர்வுகளின் போது உயரம் சார்பாக ஆண் காவல்துறையினருக்கும் பெண் காவல்துறையினருக்கும் இடையிலான வேறுபாடு எல்லாப் பதவி உயர்வுகளின் போதும் பின்பற்றப்பட வேண்டும் என மீயுயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



ஆண் மற்றும் பெண் காவல்துறையினருக்கிடையிலான உயர வேறுபாடானது காவல்துறையில் 4 அங்குலங்களாக உள்ளது. இவ் வித்தியாசம் காவல்துறைப் பரிசோதகர் மட்டம் வரைக்குமே பேணப்படுவதுடன் அதற்குப் பின்னரான பதவிகளுக்கு பால் வேறுபாடு இன்றி ஆகக் குறைந்தது 5 அடி 6 அங்குலம் உயரம் கட்டாயத் தேவைப்பாடாக உள்ளது.

இதனால் தனக்கான பதவியுயர்வை 2008ம் ஆண்டிலிருந்து பெறுவதற்குப் புறக்கணிக்கப்பட்டிருந்த காவல்துறைப் பெண் பரிசோதகர் தொடர்ந்த வழக்கிலேயே உயரத்தைக் காரணம் காட்டி பதவியுயர்வு வழங்கப்படாதிருப்பது தவறானதென தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இத் தீர்ப்பினால் இனி வரும் காலப்பகுதிகளில் 5 அடி 2 அங்குலம் உயரமுடைய பெண் காவல்துறையினர் தடையின்றி தமக்கான பதவியயர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## -வட மாகாண இராணுவம் உருவாதும்-

வடக்கிற்கு காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அவர்கள் வடக்கிற்காக தனியான இராணுவத்தை உருவாக்கும் வாய்ப்பு இருப்பதாக 'த ஹிண்டு' நாளிதழுக்கு பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார்.

பகிரப்படும் காவல்துறை அதிகாரத்தின் ஊடாகவே இவ்வாறு நிகழும் ஆபத்து இருப்பதாகவும் அதனை எதிர்கொள்வதாயின் மீண்டும் ஒரு போரை எதிர்கொள்ளும் நிலையில் நாடு தற்போதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் ஆயுதப் போராட்டமானது நடந்து முடிந்த ஒன்று என்ற கருத்தை அவர் மறுதளித்துள்ளதுடன் தற்போதைய அரசு தமிழருக்குத் தேவையான அனைத்தையும் வழங்கியுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 'உணர்ச்சிகரப் பிரச்சனைகளை" முன்னெடுக்கின்றது - ஏனெனில் ஏனைய எல்லாவற்றையும் அவர்கள் பெற்று விட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## வடமாகாணசபைத் தேர்தலுக்கு எதிராக இடைக்காலத் தடை

வடமாகாண சபைத் தேர்தல் செம்டெம்பர் இறுதிப்பகுதியில் நடைபெறவுள்ள நிலையில் அதனை தடுத்து நிறுத்தும் இடைக்கால உத்தரவைப் பெற சுமார் 10ற்கும் மேற்பட்ட சிங்கள அமைப்புக்களும் கட்சிகளும் முயற்சி செய்து வருகின்றன.

## உடப்பில் தமிழ் வர்த்தகர் கடத்தப்பட்டார்

புத்தளம், உடப்பு ஆண்டிமுனையைச் சேர்ந்த தமிழ் வர்த்தகரான சொக்கலிங்கம் சேதுரூபன் கடத்தப்பட்டுள்ளதாக காவல்துறையில் முறையிடப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை இரவு வர்த்தக நடவடிக்கைகளை முடித்தக் கொண்டு வீட்டுக்குத் திரும்பும் வழியிலேயே அவரைச் சிவப்பு நிறக் காரில் வந்தவர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

## இலங்கையில் மோசமான முறையில் மனித உரிமை மீறல்

பிரித்தானியக் குடிவரவு நடைமுறை அறிக்கையொன்று இலங்கையில் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் முடிவுற்ற போதும் மனித உரிமை மீறல்களின் நிலை படுமோசமாக இருப்பதாக குற்றஞ் சாட்டியுள்ளது.



## ரயில் நிலையம் முன்னால் தடம் புரண்ட காவல் துறையினர்- தண்டம் 5000

கொழும்பு கோட்டை பிரதான தொடரூந்து நிலையத்திற்கு முன்புறமாகக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இரு காவல்துறையினர் மதுவுக்கு அடிமையாகியிருந்ததால் கைதாகித் தண்டம் செலுத்தியுள்ளனர். மக்களுக்கு அசௌகரியங்களை அவர்கள் ஏற்படுத்துவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து கைதான இவர்கள் இருவருக்கும் தலா 2,500 அபராதம் கோட்டை மேலதிக நீதவானால் விதிக்கப்பட்டுள்ளது.

## ஆஸி படகு விபத்தில் குழந்தை பலி

சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுடன் ஆஸி சென்ற படகொன்று விபத்துக்குள்ளானதில் 97பேர் வரை மீட்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது. அவுஸ்திரேலியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையில் கடலில் இப்படகு மூழ்கியுள்ளது. இப் படகு விபத்தில் குழந்தையொன்று பலியாகியுள்ளது. அவுஸ்திரேலிய அரசு தற்போதுவரை இவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை வெளியிட மறுக்கின்றது.

## இலாபமீட்டும் முயற்சிகளில் இலங்கை இராணுவம் ஈடுபடும்

### - தளபதி ஜெகத் ஜெயசூரிய -

இலாபமீட்டும் பொருளாதார முயற்சிகளில் இராணுவம் ஈடுபடவுள்ளதாக இலங்கையின் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய டெய்லி மிரர் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

அரச கேள்விகளை பெற்றுக்கொண்டு அதற்கான வேலைகளைச் செய்து கொடுக்கும் வியாபாரப் பணியிலேயே இராணுவம் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவித்த அவர் அவ்வாறான அரச கேள்வி நடைமுறைகளூடாகப் பெற்றுக் கொள்ளும் வேலைகளைச் செய்த முடிக்கக்கூடிய ஆளணி மற்றும் ஏனைய வளங்கள் அனைத்தையும் இராணுவம் கொண்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்தித் திட்டங்களில் இராணுவம் தற்போது ஈடுபட்டு வருவதாகவும் அவ் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் தாம் இவ்வாறான வர்த்தக முயற்சிகளில் ஈடுபடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொட்லோஜ் தோட்டப் பெண் கொலை கணவர் விசமருந்திய நிலையில் மீட்பு

கொட்லொஸ் தோட்டப் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இரண்டு பிள்ளைகளின் தாயான இவரை அவரது கணவனே கெலை செய்திருக்க வேண்டும் என்றும் குடும்பத் தகராறே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## பிறர்மனை நோக்கியதால் தலைமயிர் இழந்தார் பெண்

தவறான பாலியல் தொடர்ப்பைப் பேணி வந்தார் என்ற சந்தேகத்தினால் தனது தலை முடியை இழந்துள்ளார் பெண் ஒருவர் என வி எவ் எம் வானொலிச் செய்தி தெரிவிக்கின்றது.

கல்கமுவப் பிரதேசத்தில் வசித்துவந்த முஸ்லிம் பெண் ஒருவரின் மீது சந்தேகங்கொண்ட பிரதேசக் கும்பல் ஒன்று அப்பெண்ணைப் பிடித்து மயிரை மழித்துள்ளதாகத் தெரிகின்றது.




சித்திரவதைகளக்கும் உள்ளான இப் பெண் கல்கமுவப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிகிச்சையின் பின் இப் பெண்ணின் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டுள்ள காவல்துறையினர் தொடர்ந்து சந்தேக நபர்கள் அடையாளங் கண்டுள்ளதுடன் அவர்கள் 20ம் திகதி நீதிமன்றில் நிறுத்தப் பட்டுள்ளனர் என்றும் அவ் வானொலி தெரிவித்துள்ளது.

## புத்தகாயாவுக்குக் கண்டனம்! பூமாரியம்மனுக்கு மௌனம் ஏன்?

புத்தகாயாவில் நடைபெற்ற குண்டு வெடிப்பைக் கண்டனம் செய்த மலையகத் தலைமைகள் கொழும்பிலிருந்து பூமாரி அம்மன் கோவில் அகற்றப்பட்டமையின் போது மௌனம் ஆக இருந்தது ஏன் என இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் சதாசிவம் கேள்வி எழுப்பியுள்ளார்.

## 43வது பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் வழக்கு???



43வது பிரதம நீதியரசரக்கு எதிராகக் குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் வழக்குகளைத் தொடரும் முனைப்புக் காட்டப்படுவதாக ''கொழும்பு டெலிகிராப்'' செய்தி வெளியிட்டுள்ளது.

"சட்டவாளர்களின் கூட்டு" என்ற அமைப்பின் தகவல்களின் படி இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்வதற்கான முதற் படிநிலையாக அரச ஊடகங்களில் அவருக்கெதிரான நடவடிக்கைகளும் பரப்புரைகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டிருப்பதுடன் அரச தலையீட்டால் நீதித்துறை தனது செயற்பாட்டுச் சுதந்திரத்தையும் இழந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நலவாயா மாநாட்டுக்கு முன் வேண்டத்தகாத விளைவுகள் நடக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவார சிறுகதை

# அட்சரம் தின்னும் படிவங்கள்

திசேரா

என் கட்டிலுக்கு அருகிருந்த முக்காலியில் விண்ணப்பப்படிவத்தை வைத்து இரவு முழுவதும் அவதானித்துக் கொண்டிருக்க வேண்டுமென நினைத்தேன். எண்ணங்கள் பறக்கப்பறக்க தலை சூடாகிக் கொதித்தது. கண் எரிவு காண கசக்கி ஏக்கப் பெருமூச்சு விட்டேன். எழுத்துக்கள் கால் முளைத்து நகர்ந்து சென்று விடுகின்றனவா? அல்லது படிவம் அட்சரங்களைத் தின்று விடுகின்றனவா? (தொடரும்)

— — — — — — — — — — — —

தன்னிச்சையாக கால் முளைவிட்டுச் செல்ல அவற்றுக்கு முதிர்வு கிடைத்திருக்க வேண்டும். எண்ணங்கள் நிறைந்து ஒரு கணத்தில் கண்கள் மூட கழுத்துடன் ஒட்டிக்கொண்டே தலைமுன் விழுந்தது. பிடரி வலியெடுக்க மெதுவாய் கண் திறந்தேன். அறயை நிறைத்து வெளிச்சம் கிடந்தது. வெளிச்சம் பீச்சிய படிவம் சுருண்டு எதையோ கடித்து மல்லுக்கட்டியது. மடிபட்ட வாய்க்குள் நறுக்கும் சத்தம் கேட்டது. சவ்வை இழக்கும் நாய்த்தலை போல ஆட்டி-உதறிக் கொள்வதை விழி பிதுங்கி வெளித்தள்ளப்பார்த்தேன்.

-விரல் துண்டாகி விடும் பயத்தில் தொட்டுப் பார்க்க முனையவில்லை. போராட்டம் முற்றுப்பெறும் தறுவாயில் அசைவு குறைந்து ஓய்வுக்கு வந்த படிவம் - ஆறுதலடைந்து விரிந்து படுக்கவும் ஒளிமெல்ல மங்கி இருள் படர்ந்தது. படிவத்திலிருந்து ஆவியாகிய எழுத்துக்கள் மெல்லிய வெண்புகையாக மேலெழுந்து போவதைப் பார்த்தேன். அசைந்து நடனமிட்டபடி ஓட்டிடவுள் நுழைந்து மறைந்து போனது- ஆவியாய் அலையும் எழுத்துக்கள்.

இரண்டாம் முறை சென்று வந்து என்ன பண்ணுவது என்ற சிந்தனைக்குள் நனைந்து தூறல் சொட்டி ஓய்ந்த நள்ளிரவில் குண்டு மல்லிகை வாசத்தின் கீற்றுக்கள் மூக்குள் நுழைய முகத்தில் சிற்றெறும்புகள் ஊர்ந்தன.

பறந்து இரைச்சலிட்ட எழுத்துக்கள் ஒழுங்கை மாற்றி மாற்றி அமைத்துச் சொற்களைக் காட்சிப்படுத்தியது. அவற்றை வாசித்து கணக்கிட்டுக் கொண்டுதான் இருந்தேன். அவற்றைக் கோர்த்துப் படித்தேன். “நான்” செத்துப் போக எல்லாமும் நானான கவிதையாக இருந்தது. அந்தக் கவிதை எனக்குப் பல விருதுகளையும், வைரம் பதித்த தங்கக் கிரீடங்களையும் சூட்டியது. நானே பைகம்பர் என அறிமுகப்படுத்தினேன். ஆனால் மிகவும் துன்பகரமான விடயமாக அமைந் திருந்தது என்னவென்றால், அந்தக் கவிதையில் ஒரு வரிகூட விடியலில் ஞாபகத்துக்கு வரவில்லை.

அதை விடக் கொடூரம் என்னில் ஊர்ந்த ஒரு எழுத்தைக் கூட நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை என்பது. அந்தச் சோகத்தின் கவ்வல் பல்லைப் பதியப் பண்ணிக் கொண்டிருந்தது.

நான்காவது முறையில் இரண்டாவது தடவையாக குறுந்தாடிச் செயலாளர் முன்னால் அமர்ந்தேன். தொலைபேசித் தொடர்பை துண்டித்து விட்டு என் வருகைக்கான காரணத்தை வினவிக் கொண்டே படிவத்தில் கண்களை ஓடவிட்டார். நான் சற்றும் எதிர் பார்க்காத வகையில் இருக்கையில் இருந்து எழுந்தே விட்டார். ஷஷஎன்ன இது'' சற்று அதிகமான குரலிலே கத்தினார். அறையில் இருந்த வளிப்பதப்படுத்தலை தாண்டி வெளியே நின்ற சிற்றூழியனை உள்ளே இழுத்து வந்தது.


விண்ணப்பப்படிவத்தை வினாத்தாளாய் மாறி இடைவெளி நிரப்பக் கோரிய வண்ணம் கிடந்தது. நிறைத்து வைத்திருந்த குற்றுக் கொண்ட கோட்டின் இடையிடையே எழுத்துக்கள் காணாமல் போயிருந்தன.

அவர் அறிந்திராத வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரம் அவர் காதுகளுக்கு சிவப்படித்தது. ஷஷஎனக்கு வேலையில்லையென நினைத்து, குறுக்கெழுத்திட்டு விளையாட அழைக்கின்றாயா'', செயலாளர் எரிந்துவிழ, சிற்றூழியன் என் பிடரியில் கையை வைத்துத் தள்ளிக் கொண்டு அறைதாண்டி, காத்திருப்பிடம்தாண்டி படிக்கருகில் விட்டான். அவமானத்தை எண்ணிக் கொண்டு இறங்கினேன். ஆனாலும், கணக்கு மறந்து போனது.

எப்போதும் எனக்குத் தெரிந் திருக்கவில்லை எழுத்துக்கள் செல்லும் மாயப்பாதை. மூன்றாம் நாளுக்கு முந்திய இரவில் படிவத்தினால் தின்னப்பட்ட எழுத்துக்களின் ஆவிதான் ஒளி உறங்கிய கண்களுள் கவிதை எழுதியிருக்குமென ஊகித்தேன். ஆனாலும் இப்போதும் கூட கவிதையோ, எழுத்தோ நினைவுக்கு வரவில்லை.

காரியாலயத்திலிருந்த அனைவருமே என் முகத்தை மறந்து விடும் வரை பொசிப்பற்றுக்கிடந்தேன். நகரத்திலிருந்த நண்பனின் மூலம் பிடரிபிடித்த சிற்றூழியன் மாற்றலாகிச் சென்றதை அறிந்து கொண்டு நரையேறிக் கிடந்த தாடியை வளரச் செய்து சோகத்தை உருவாக்கிக் கொண்டேன். பலரது கேலிப் பார்வையை புறக்கணித்து ஐந்தாம் முறையாக நுழைந்தேன்.

சிரேட்ட இலிகிதரின் முன்னால் கூத்தாடினேன். “இதில் என் தவறு ஏதுமில்லை'' யெனக் கெஞ்சினேன்.



நிவாரணம் பெற செலவிட்ட பயணச் செலவை, குடும்பம் பட்ட துயரை கண்ணீரை வடிய விட்டுக் கூறினேன்.

அவள் மனம் சற்றேனும் இளகி இருக்க வேண்டும். கையை நீட்டினாள். பிரதியைப் பெற்றுப் பார்த்தவள், ஷஷஉனக்கின்னும் விளையாட்டுத்தனம் போகவில்லை, இதைப்படிக்க எனக்குக் கால அவகாசமில்லை” தூக்கி எறிந்தாள். மீண்டுமொருமுறை எல்லோருடைய கண்களும் என்னில் மொய்த்தன. பிரதியைப் பொறுக்கி அவள் ஏசிய காரணத்தைத் தேடினேன்.

எழுத்துக்களெல்லாம் பல்கிப்பெருகி தாறுமாறாய் குட்டிகளை ஈன்று எல்லாப் பக்கங்களும் நிரம்பிக் கிடந்தன. கொஞ்சம் தள்ளி வைத்துப் பார்க்கையில் கோழிகிழித்த எழுத்துக்களாலான கட்டுரை போலத் தென்பட்டது. தலை ஒரு முறை சுழன்று நின்றது. ''இது கூட என் தவறல்ல, மூலப்பிரதியைப் பார்த்தால் உண்மையைப் புரிவீர்கள்” என கழிவிரக்கத் தொனியில் மன்றாடினேன். திரும்பத் திரும்ப கஸ்டத்தைச் சொன்னேன். அம்மாவையும் இழுத்து நிறுத்திப் பாட்டினேன். அவளுடைய இடர்பாடுகளும் எடுத்துச் சொல்லப்பட்டது. பிரதி மீண்டுமொருமுறை அவள் கைகளுக்குச் சென்று வந்தது. திகதி முத்திரையைக்காட்டி ''இது நான்கு மாதங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்டது. இதைத் தேடியெடுக்க இப்போது முடியாது” என்றாள். அனர்த்த நிவாரண அதிகாரியைச் சந்திக்க வெள்ளத்தில் நீந்திச் செல்ல வேண்டி இருந்த காலத்தையும், ஒருவாறு அவரைக் கண்டுபிடித்து உறுதிப்படுத்தற் கடிதத்தை மூன்றாம் முறையில் இலிகிதரிடம் சமர்ப்பித்ததையும் விளக்கினேன். பிரதிகளுள் அடிக்கடி நடக்கின்ற மாற்றத்தின் விளைவுகளையும் எடுத்துக் கூறினேன். எனிலிருந்து எழும் கருகும் புகையின் வாசனையை நுகர்ந்தவளாய், சற்று நிதானத்துடன் நம்பிக்கையைக் கலந்து கூறினாள். “இன்று போய் நாளை வா, - நல்லது நடக்கும்” பசிவயிற்றைக் கிள்ள நிராயுத பாணியாய் தோல்வியும் இன்றி வெற்றியும் இன்றி களத்தை விட்டு வெளியேறினேன்.

ஆறாம் முறை எவ்வித பிரயோசனமுமற்றதாய் மக்கள் வெள்ளத்தில் அடிபட்டு, சரிந்த மண் சகதியில் கால் புதைத்து, மூக்குப் புற்றுக்கட்ட புழுதிக் காட்டிடை பயணக் களைப்பு மிஞ்ச வெளியேறினேன்.

உடைந்த மனதின் துண்டுகளை எண்ணி வேதனை கொண்ட நடையுடன் கூடவே ஏமாற்றத்துடன் வந்த நண்பர்கள் அனுப்பிய ஆலோசனைகளை காதுகளில் பெற்று நடந்தேன்.

“காணாமல் போன உன் எழுத்துக்களை அங்கிருக்கும் ஒரு அதிகாரி திருடிச் சென்று பெட்டியொன்றில் சேமித்து வைத்திருப்பான். அவனை அணுகி, சிற்றுண்டிச்சாலைக்கு அழைத்துச் சென்று நா சுவைகொட்டத் தேனீரும், வயித்துக்கு பலகாரமும் வாங்கிக்கொடு அந்த மயக்கம் கலையும் முன்னமே கண்கள் அகலவிரிய பச்சை நிறத்தாளொன்றை அவனுக்கு நீட்டு, , இரண்டு தினத்துக்குள்ளாகவே தவற விட்ட இடங்களை எழுத்துக்கள் நிறைத்துக் கொள்ளும்”.

இன்னொருத்தன் சொன்னான். ''அங்கிருப்பவர்களிலேயே, சகல வல்லமையும், அதிகார தந்திரமும், சுழிவுகளும் தெரிந்தவன் சிற்றூழியன் தான். எந்த மேசையில் இருந்தாலும் கோப்பிலிருந்து படிவத்தை எடுத்து எழுத்துக்களைச் சரிப்பண்ணி பத்திரமாக நகர்த்துவான். அவனுக்கு ஒரு பையில் தேயிலையைக் கொடு மகிழ்ந்து விடுவான். ஏனென்றால், அதுதான் தங்களுக்கு உற்சாகம் தந்து கொண்டிருப்பது, என நம்பிக்கொண்டு இருப்பவர்கள் அவர்கள் - இல்லாவிட்டால் இலிகிதரின் மேசைக்குச் சென்று அவளுக்கு பிடித்தமானது என நீ கருதும் அன்பளிப்பை மேசையில் வைத்துவிட்டு, அடுத்த வாரத்தில் வருவதாகச் சென்றுவிடு. எப்படியும்



அதை எடுக்க அவள் நிர்ப்பந்திக்கப் பட்டதால் எடுத்துக்கொண்டு, எழுத்துக்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபடுவாள்”.

எதுவும் என் இயல்புக்கு பொருந்தி, மனதுடன் ஒட்டவில்லை.

பிரதிகளின் எழுத்துக்கள் ஏன் தின்னப்படுகின்றன. திடீரென பல்கிப் பெருகுகின்றன. பிரதிகள் மட்டுமே இப்படி மாற்றமுறுகின்றதா - மூலமும் மாறிக் கொண்டிருக்குமா, சில வேளைகளில் பிரதிகள் கூடி மூலத்தை தின்றிருக்குமோவென கலங்கி இருந்தேன். இதுவரை அவர்கள் யாருமே என் கண்களுக்கு மூலப்பிரதியைக் காண்பிக்கவேயில்லை.

மேலதிக செயலாரின் அறிவுறுத்தலுக்கமைய புதிய படிவம் தேடி நிரப்பினேன். கிராம அதிகாரியின் கையொப்பத்தை அனுமதியுடன் பெற்றுக்கொண்டேன். இரண்டு நாட்கள் இருவு பகலாக காவல் இருந்து படிவம் எழுத்துக்களைத் தின்னவில்லை. மாறவும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டபின் பிரதேச பொறுப்பதிகாரியை சந்திக்கச் சென்றேன். விபரங்களைக் கூறி கிராம அதிகாரி கையொப்பமிட்டதைக் காட்டினேன்.

தான் புதிதாக வந்திருப்பதாகவும், வடிந்து சென்று கடலுடன் சங்கமித்துப்போன வெள்ளத்தைப் பிரித்துப் கொண்டு வந்து இன்றைய தினமிட்டு கையொப்பமிட முடியாது என மறுத்து விட்டார். அதற்கான பல நியாயங்களை விளக்கினார். எதுவும் ஏறவில்லை, அப்பாவியாய் நின்ற என் ஏமாளித்தனத்தை எண்ணி வெட்கப்பட்டேன்.

ஆனால் அவர் முடியாது என்பது மட்டும் மண்டைக்குள் சூடாகிச் சுற்றியது. வழமையை விடவும் அதிக வேகத்துடன் வீடு திரும்பினேன்.

வெள்ளம் வடிந்து மேற்படையில் ஈரமற்றுப்போன மண்ணைத் தோண்டிக் குழியாக்கினேன் - முன் வாசலிலேயே முழங்கை தாண்டிப்போக விரல் நீரைத்தொட்டது. வீட்டிலிருந்த பிரதிகளைத் தேடித் தேடிக் கண்டுபிடித்து கிழித்து குழியினுள் இட்டேன். புதிய படிவத்தையும் போட்டு விடத்தவறவில்லை. மண்ணெடுத்து குழிநிறைத்து மூடி, மட்டந்தட்டி குதிகாலைக் குத்தி இறுக்கினேன்.

அதன் பின்னரெல்லாம் படிவம் நிரப்பும் பொறுப்பை மனைவியிடம் தந்துவிட்டு, அவளுக்கு மாற்று மொழிகளுக்கான வகுப்புக்களை ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, வலையை இழுத்துக் கொண்டு கடலுக்குப் போனேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாடசாலை நினைவுகளில்.....



ஆறுவயதினில் ஆரம்பமான
ஆறுதனில்
என்றும் நிற்காத
என்றும் வற்றாத ஜீவநதி நாம்

அன்று கண்ணை கசக்கிக்கொண்டு
அதிபரின் முன்னால்
இன்று செய்த குறும்பிற்காய்
அதிபரின் முன்னால்

எமது முதலாம் ஆண்டு
நினைவுகளில்
ஆரம்பமான நட்பு
இன்றும் அழியவில்லை
என்றும் அழியாது

வீட்டுவேலை செய்யவில்லை
'சேர் அடிக்காதீங்க' என்று உரத்த
குரலில்
மறதிக்கு மறதி வாத்தியார் பிரம்பு
என்பார்
அது சேரின் புதுமொழி என
நினைக்கின்றேன்

பாடசாலை குறும்புகள்
பாடமெனில் கனவுகள்
பரீட்சைகள் ஆரம்பித்துவிடும்
பரிதாபமாக முதல் நாள்
புத்தகங்களோடு

பாடப்புள்ளிகள் கைக்கெட்டும்
புள்ளிகுறிப்புகள் பதியப்படும்
காலைக்கூட்டத்தில் புள்ளிகுறிப்புகள்
மாலை வீட்டில் பிரம்படிகள்

அடியாலும் சொரணையில்லை
அடித்த பின்னும் அம்மாவின் நட்பு
பாடசாலை ஆரம்பமாகும்
பாட வகுப்பில் குறும்பு சேட்டைகள்

மீண்டும் குறும்புகள்
மீண்டும் அதிபரின் முன்
பாடசாலை நினைவுகளில்
பாடம் முழுவதும் கூத்தடித்து

இறுதியாய் வந்து நின்றது
இறுதிப்பரீட்சை
அனைவரும் புத்தகத்துடன்
படிப்போ படிப்பு அளவில்லாப்
படிப்பு
பரீட்சையில் சித்தி என்றவுடன்

வாழ்த்துக்கள் வந்து சேர்ந்தன
பாராட்டுக்கள் வந்து குவிந்தன -
மீண்டும்
நண்பர்களோடு கூத்தடிக்கும் நேரம்
நண்பனோடு வீதி உலா
வழியில் பாடசாலை வீதி கடந்து
போகையில்
கடந்து போனது எம் பாடசாலை
நினைவுகள்.......

**இரவிதாஸ் ஹிமோஷ்**
8B, தி/ இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா
இந்துக்கல்லூரி
திருகோணமலை

**உங்கள் ஆக்கங்களும்**
**இடம்பெற வேண்டுமா? ......**

**கவிதைகள், கதைகள்,**
**இலக்கிய வரிகளை**
**மலைமுரசிற்கு அனுப்புங்கள்**



**வெண்புறாக்கள் வட்டமிட்டுப் பறக்கிறது**
**வெண்ணிலாவும் விடியலைத் தேடி விரைகிறது**

பேதம் பார்த்தால் மோதல் தோன்றும்
யாதும் ஒன்றேயானால் ஞாலம் வெல்லும்

அன்பு, கருணை, சமாதானம் என்று
போதித்த
இயேசு பிரானின் போதனைகள்
அஹிம்சை நிலைத்திடும் என்ற
இந்துமதக் கோட்பாடு
ஏகத்துவம் என்ற நீண்டபயணத்தில்
ஒரு மனநிலை பற்றி உரைத்த
முகம்மது நபியின் கொள்கை
சமதர்மம், சமத்துவம் என்றிட்ட
கௌதம புத்தரின் சாசனம்
மதங்கள் போதிக்கும் மகத்துவங்கள்
ஒன்றே.....

மதம் என்ற மதத்தால் - இன்று
நாட்டின் சமாதானப் பூ உறங்கிவிட்டதே
சாந்தியால் உலகம் தழைப்பது சரியா
சமய பேதம் வளர்ந்தே தளர்வது சரியா
மனிதா! நீ எதற்குக் தயார்?

கனவு காணும் வாழ்க்கையை
சொர்ப்பனமாக்கும் சமாதானம்
சொந்தம்சொல்லிட
மிருக வேஷம் கலைந்து மனித வேஷம்
பூண்டு
மதங்கள் போதிக்கும் சமாதானத்தை
மனதில் கொண்டு செயற்படுவோம்.

டிலக்ஷனா சௌந்தரராஜன்
10A, தி/ மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

## சம உரிமை

முண்டியடிக்கும்
கூட்டத்தினிடையே
முயற்சி செய்து அவள்
பேருந்தில் ஏறினாள்

இருக்கை இல்லாத நிலையில்
நின்று கொண்டிருந்தாள்
அந்தப் பெண் தேவதை

இளைஞன் ஒருவன் எழுந்து
இருக்கை கொடுக்க முனைந்தான்
பின்னே இருந்த
பெரியவர் தடுத்தார்

பெண்கள்
சம உரிமையைத்தானே
கேட்கிறார்கள்
நீர் ஏன் எழுந்து
அதிக உரிமையைக்
கொடுக்கிறீர்

அவன் மட்டுமல்ல
அங்கிருந்த அனைவருமே
அமைதி காத்தார்கள்

அது ஆமோதிப்பின்
அடையாளமோ?

**சி.சஜித்காந்**
9E, தி/ கோணேஸ்வரா
இந்துக்கல்லூரி,
திருகோணமலை

## குற்றவாளிகளாகும் உள்ளூராட்சி உறுப்பினர்கள்

பாலையூற்றான்

இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகள் விரும்பத்தகாதவாறு இடம்பெற்று வருகின்றன. அங்குள்ள அரசியல்வாதிகளின் அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமே இருக்கின்றன. கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், வன்புணர்வு, லஞ்சம், ஊழல், அராஜகம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

பரவலாக சகல உள்ளூராட்சி நிறுவனங்களிலும் இவை மலிவாக இடம்பெற்றுவருவதை எவரும் மறுக்க முடியாது. அண்மையில் பாடசாலை ஆசிரியை ஒருவரை முட்டுக்காலில் இருக்கும்படி கட்டளை பிறப்பித்து அவரை அவமானப்படுத்தனார் உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றின் உறுப்பினர் ஒருவர்.

இவ்வாறான அராஜகங்களினால் பல உள்ளூராட்சி தலைவர்கள், உறுப்பினர்கள் இன்று சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர். மக்களுக்கு சேவை செய்யவென்று புறப்பட்டவர்கள் அந்த மக்களுக்கு அநீதிகளை விளைவிப்பது மாத்திரமல்ல நாட்டின் சொத்துக்களை சூறையாடி சட்டத்தை தம் கையிலெடுத்து அட்டகாசம் புரிவதை சகிக்க முடியாமலுள்ளது. வீட்டில் உட்காருவதற்கே கதிரை வசதியில்லாதவர்களுக்கு பதவியையும் கொடுத்து அதற்குரிய கதிரையையும் கொடுத்தால் இனி கேட்கவா வேண்டும்? பாராளுமன்ற உறுப்பினர்களுக்கில்லாத தலைக்கணம் இன்று உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு உள்ளதென பல பத்திரிகைகள் சுட்டிக்காட்டி வருவதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். ஆனால் இந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு ஏதோ ஒரு வகையில் தைரியம் கிடைக்கின்றது என்பதையும் கூறித்தான் ஆக வேண்டும்.

தொடர்ச்சியாக இவர்கள் எவ்வித பயமுமின்றி இவ்விதமான அராஜகங்களில் ஈடுபடுவதை பார்க்கும் பொழுது இவர்களை ஆர்வப்படுத்த அல்லது இவர்களை காப்பாற்ற மறைமுக சக்திகள் இருந்து வருவதை நம்பாமல் இருக்க முடியாது.

இவர்கள் எதையும் மறைமுகமாக செய்யவில்லை. பல சட்டவிரோத நடவடிக்கைகளை மிக பகிரங்கமாகவே செய்து வருகின்றனர். இதற்குக் காரணம் பலம் பெற்ற உயர் அரசியல்வாதிகளினதும், வல்லமையுள்ளவர்களினதும் பலமிக்க ஆசீர்வாதமே.


"வெட்கமும், துக்கமும் அறவே இல்லாத ஒரு சிலர் அரசியலில் புகுந்துள்ளதாலே நாட்டில் இவ்விதமான அராஜகங்கள் இடம்பெறுவதாக" பௌத்த பிக்கு ஒருவர் பத்திரிகையொன்றுக்கு பேட்டியளித்திருந்தார். சில உள்ளூராட்சி நிறுவனங்களில் ஆளும் கட்சிக்குள்ளே பல மோதல்கள் இடம்பெற்று வருவதால் இவ்விதமான முறைகேடுகள் பகிரங்கப்படுத்தப் படுகின்றன.

சில உள்ளூராட்சி நிறுவனங்களில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒன்றாக இணைந்து இவ்விதமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆட்சியில் இருக்கும் போதே ஏதாவதை சுரண்டிக் கொள்ள வேண்டுமென்பதே அவர்களின் அடிப்படைக் கொள்கையாகும்.

ஆளை, ஆள் காட்டிக் கொடுக்காமல் பதவியில் இருக்கும்வரை சுரண்டிக் கொள்ளும் கொள்கைகளை கொண்டவர்கள் மர்மமான விடயங்கள் வெளியில் உலாவ வராமல் பார்த்துக்கொள்வார்கள். தத்தமது பங்குகளை பிரிக்கும் பொழுது ஏதும் சர்ச்சை ஏற்பட்டால் மாத்திரமே சட்டத்திற்குள் சிக்கிக் கொள்வார்கள்.

சில உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் தாம் சுரண்டியதை ஆளும் கட்சி, எதிர்க் கட்சியென பிரித்துப் பார்க்காமல் பங்கை பிரித்துக் கொள்வார்கள். இதனால் எந்தவொரு ஊழல் விவகாரங்களும் மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் வெளியில் வராது. அவை மூச்சு திணறியே இறந்துவிடும்.

சில தலைவர்கள் தாம் பெற்ற இன்பத்தை தமக்கு வேண்டிய உறுப்பினர்களுக்கு இடையில் பகிர்ந்து கொள்வார்கள். தமக்கு வேண்டியவர்கள் என்று கூறும் போது ஒன்றில் எல்லாவற்றுக்கும் தலையை அசைத்து ஆமாப் போடுபவர்களாகவும் இருக்கலாம் அல்லது பிரச்சனைப் படுத்துவதற்கு முன் நிற்கும் உறுப்பினர்களாகவும் இருக்கலாம்.




தமது ஆட்சிக் காலத்திற்குள் மக்களின் பணத்தில் ஆடம்பரமாக வாழ்ந்தால் போதும் என்பதால் சட்ட விரோத நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இருப்பினும் சட்டம் இன்று அவர்களை விரட்டிக் கொண்டே இருக்கின்றது. பலர் தண்டனையை அனுபவித்துள்ளனர். பலர் தண்டனைக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர்.

மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தியதாலும், பாதிக்கப்பட்டவர்களால் புகார்கள் மேற்கொள்ளப்பட்டதாலும் இவ்விதமாக நடந்து கொண்ட உறுப்பினர்கள் சட்டத்தின் கைக்குள் சிக்கியுள்ளனர். சிலர் தாம் செய்யும் தவறை எவராலும் கண்டுபிடிக்க முடியாது என்ற இறுமாப்பில் பல தவறுகளை மேலும், மேலும் செய்து வருகிறார்கள். காலம் பகைத்தால் எல்லாம் பகைக்கும் என்று அவர்களுக்கு தெரியாது.

இப்படியானவர்கள் என்றோ ஒரு நாள் சட்டத்தின் கையில் அகப்பட்டே தீருவார்கள்.

அப்பொழுது செய்யாத குற்றங்களும் செய்த குற்றங்களுடன் சேர்ந்து இசைபாடி சிறைக் கம்பிகளை எண்ணுவதற்கு தக்க வாய்ப்பை தரும் என்பது தீமைகளுக்காகத் தண்டனை வழங்கும் ஏற்பாடுகளின் சாதாரண நியதியாகும்.

கைதாகுபவர்களைப் பார்த்தால் நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகள் அதைத்தான் உறுதி செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'திருமணம் நிச்சயம். அதுவும் குருவாயூர் கோயில்லதான். ஆனால் இப்போது ,இல்லை!'

எனக்கு திருமணம் நடப்பது நிச்சயமான ஒன்றுதான். அதுவும் நான் விரும்பும் குருவாயூர் கோயிலில்தான் நடக்க வேண்டும் என விரும்புகிறேன், என்று நடிகை பாவனா தெரிவித்துள்ளார்.



சமீபத்தில் பாவனாவுக்கு குருவாயூர் கோயிலில் திருமண ஏற்பாடுகள் நடப்பதாக செய்திகள் வெளியாகின. ஆனால் இது தவறான செய்தி என்று அவர் விளக்கம் தெரிவித்துள்ளார்.
"எனக்கு திருமணம் நடக்கப் போவது உண்மைதான். அதுவும் எனக்குப் பிடித்த குருவாயூர் கோயிலில் நடக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன். ஆனால் இப்போதல்ல. இன்னும் ஓராண்டு கழித்துதான் திருமணம் செய்வேன். மாப்பிள்ளை யார் என்றெல்லாம் இப்போது கூற முடியாது." என்றார்.

பாவனா தமிழில் நடித்த கடைசி படம் அஜீத்தின் அசல். அதன் பிறகு அவருக்கு வாய்ப்புகள் இல்லை. கன்னடம், மலையாளத்தில் நடித்து வருகிறார்.

# சினிமுரசு

## லோன் ரேஞ்சர்
### ஒரு பார்வை..



வெள்ளி கடத்தலை தடுக்க முயற்சிக்கும் இரண்டு பேரின் நகைச்சுவை கலந்த ஆக்சன் கதை. ஒரு சிறுவனிடம் டான்டோ என்ற கதாபாத்திரம் கதையை சொல்வது போல் ஆரம்பிக்கிறது படம்.

பழங்குடியினர் வசிக்கும் ஊரில் வாழும் டான்டோ இரண்டு வெள்ளையர்கள் ஆற்றில் மிதப்பதை கண்டு அவர்களை மீட்டு தன் ஊருக்கு கொண்டு வந்து காப்பாற்றுகிறான். அப்பொழுது ஆற்றில் வெள்ளிக்கல் ஒன்று மிதக்கிறது.

அதைக் கண்ட வெள்ளையர்கள் சிறுவனிடம் அந்த வெள்ளிக்கல் எங்கிருந்து வருகிறது என்று கேட்க அதனை சிறுவன் சொல்ல மறுக்கிறான். எனவே அந்த சிறுவனிடம் தங்களிடம் உள்ள வெள்ளி கடிகாரத்தை காண்பித்து அதனை அவனுக்கு கொடுப்பதாக சொல்லி அவனிடம் வெள்ளிக்கல் இருக்கும் இடத்தை பற்றிய உண்மையை அறிந்து கொள்கின்றனர்.

அதன்பின் வெள்ளையர்கள் இருவரும் வெள்ளி பற்றிய விடயம் வெளியே தெரியாமல் இருப்பதற்காக பழங்குடியின மக்கள் வசிக்கும் கிராமத்தையே அழிக்கின்றனர். இதில் அந்த சிறுவன் மட்டும் உயிர் தப்புகிறான்.

இது ஒருபுறம் இருக்க...

டெக்ஸாஸ் நகரில் காவல்துறை அதிகாரி டான் ரெய்டு தனது அரசு அதிகாரி உத்தரவின் பேரில் இண்டியன் பார்டருக்கு கைதி ஒருவனை பிடிக்க போலீஸ் அதிகாரிகளுடன் தன் தம்பி ஜானையும் அழைத்துச் செல்கிறார். அங்கு கைதி கும்பலால் டான் ரெய்டும் மற்ற போலீஸ் அதிகாரிகளும் கொல்லப்படுகின்றனர். டான்டோவால் ஜான் காப்பாற்றப்படுகிறான். தொடர்ந்து சண்டையிட்டு ஜான் கைதியை ஒருவழியாக பிடித்து டெக்சாசுக்கு மீண்டும் அழைத்து வருகிறான்

ஜான் அழைத்து வந்த கைதிக்கு சரியான தண்டனை கிடைத்ததா? வெள்ளியை கடத்த முயன்ற கும்பல் என்னானது? டான்டோ தன் இன மக்களை அழித்ததற்காக பழி தீர்த்தானா? என்பதே மீதிக்கதை.

படத்தின் முதல் பாதி நகைச்சுவையாக நகர்ந்து சென்றாலும் இரண்டாம் பாதி கடத்தல், சண்டை என்று செல்கிறது. ஜானி டெப் தன்னுடைய கதாபாத்திரத்தை தன்னுடைய பாணியில் மிகச்சிறந்த முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார். படத்திற்கு இவரது நடிப்புடன் கூடிய நகைச்சுவை பலம் சேர்த்துள்ளது.

மொத்தத்தில் 'லோன் ரேஞ்சர்' சாகசங்கள் நிறைந்த பொழுதுபோக்கு படம்.

## விஜயின் தலைவா திரைப்படம் வெளியாகும் திகதி தள்ளி வைப்பு

'துப்பாக்கி' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து நடிகர் விஜய் நடிக்கும் படம் 'தலைவா'.

இப்படத்தை இயக்குனர் விஜய் இயக்குகிறார். ஜி.வி.பிரகாஷ் இசையமைகின்றார். இப்படத்தின் பாடல்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டது. இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக அமலாபால் நடித்துள்ளார். மேலும் சத்யராஜ், சந்தானம் உள்ளிட்ட பலரும் நடிக்கின்றனர்.
இப்படத்தின் இறுதிக்கட்ட வேலைகள் முடிவடைந்து தற்போது வெளிவரும் தருவாயில் உள்ளது.

இப்படம் ஆகஸ்ட் 9ந் திகதி வெளியிடப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இப்படம் ஆகஸ்ட் 15ந் திகதி வெளியிடப்படப் போவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்படத்தை வேந்தர் மூவிஸ் வெளியிடுகிறது.

'துப்பாக்கி' வெற்றியைத் தொடர்ந்து விஜய் நடிப்பில் உருவாகியுள்ள இப்படத்தின் மீது ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகமாகியுள்ளது.





## கவிஞர் வாலி காலமானர்

பிரபல கவிஞர் வாலி சென்னையில் கடந்த16ம் திகதி உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 82. நுரையீரல் தொற்று மற்றும் அதிகமான சளியின் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னையில் சிகிச்சை பெற்று வந்தார். 35 நாட்களாக அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி 16ம் திகதி மாலை 5 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது. 1958-ம் ஆண்டு திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதத் துவங்கிய கவிஞர் வாலி இதுவரை ஆயிரம் திரைப்படங்களுக்கு மேல் பாடல்கள் எழுதியுள்ளார். பத்மஸ்ரீ மற்றும் தேசிய விருதுகளையும் பெற்றுள்ளார். தமிழில் எதுகை மோனையில் பாடல்கள் எழுதுவதில், இவரைவிட சிறந்த கவிஞர் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

## "ஆர்யாவுக்கும் எனக்கும் இடையே ஒண்ணுமே இல்ல!" கவலைப்படுகின்றாரா? நயன்தாரா

எனக்கும் ஆர்யாவுக்கும் காதல் என்று வரும் கிசுகிசுக்கள் நிஜமல்ல, எங்களுக்கிடையில் அப்படி எந்த நெருக்கமும் இல்லை என்று நயன்தாரா தெரிவித்துள்ளார்.

பாஸ் என்கிற பாஸ்கரனில் இருவரும் ஜோடியாக நடித்ததிலிருந்து நயன்தாராவும், ஆர்யாவும் காதலிப்பதாக தொடர்ந்து கிசுகிசுக்கள் வந்தவண்ணம் உள்ளன. தற்போது ராஜா ராணி படத்திலும் இணைந்து நடிக்கின்றனர்.

சமீபத்தில் ராஜா ராணி பட விழாவுக்காக தயாரான அழைப்பிதழில் நயன்தாராவும், ஆர்யாவும் மோதிரம் மாற்றி திருமணம் செய்து கொள்வது போன்ற படத்தையும் அச்சிட்டு பரபரப்பு ஏற்படுத்தினர்.

இதுகுறித்து நயன்தாரா கூறுகையில், "ஆர்யாவையும், என்னையும் இணைத்து வதந்திகள் பரவுகின்றன. சினிமாவில் இதெல்லாம் சகஜம்தான்.

ஆனால் உண்மையில் எங்களுக்குள் எதுவும் கிடையாது. ஆண்-பெண் பழகினால் காதலாகத்தான் இருக்க வேண்டுமா? நண்பர்களாக இருக்க கூடாதா?

நானும் ஆர்யாவும் சாதாரண நண்பர்களாகத்தான் இருக்கிறோம், மேலும் ராஜா ராணி பட அழைப்பிதழில் திருமணம் செய்து கொள்வது போன்று எங்கள் படங்களை அச்சிடப்பட்டு இருந்தது படத்தின் விளம்பரத்துக் காகத்தான்," என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யார் இவர்"




பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் பெரும்பாலானோருக்கு அந்த சிரிப்பு மனிதரின் ஓவியம் நன்கு அறிமுகமானதாகும்.

மற்றவர்களின் தகவல், கருத்துகளை வேடிக்கையாக மறுதலிக்கும் சந்தர்ப்பங்களில் அந்த விநோத சிரிப்பு மனிதர் ஓவியம் குறியீடாக பயன்படுத்தப்படுவதுண்டு. ஆனால், அந்த ஓவியம் வெறும் கற்பனை ஓவியமல்ல. உண்மையாக வாழும் ஒருவரின் முகத்தோற்றமே அது.

உலகின் முன்னணி கூடைப்பந்தாட்ட வீரர் முகத்தோற்றத்தில் வரையப்பட்டதுதான் அந்த ஓவியம். யோ மிங் (Yao Ming) எனும் இவ்வீரர் சீனாவைச் சேர்ந்தவர். 1980 ஆம் ஆண்டு பிறந்த அவருக்கு 32 வயது. பொதுவாக சீனர்கள் குள்ளமானவர்கள் என்ற அபிப்பிராயம் உள்ளது. ஆனால், யோ மிங்கின் உயரம் 7 அடி 6 அங்குலம் (2.29 மீற்றர்). அவரின் உயரம்போலவே அவரின் கூடைப்பந்தாட்ட ஆற்றலும் உயர்ந்தது. சீனாவின் சார்பில் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி பல பதக்கங்களை வென்றார்.

2002 ஆம் ஆண்டு முதல் 2011 வரை அமெரிக்க தேசிய கூடைப்பந்தாட்ட சங்கத்தின் (என்.பி.ஏ.) போட்டிகளில் பொஸ்டன் ரொக்கெட் அணி சார்பில் பங்குபற்றினார். யோ மிங் எவ்வாறு மேற்படி சிரிப்பு மனிதராக சமூக வலைத்தளங்களில் மாற்றம் பெற்றார் என்ற கேள்வி எழுகிறதா?

2009 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியொன்றின் பின்னர் செய்தியாளர் மாநாட்டில் சக வீரர் ரொன் ஆட்டெஸ்ட் சகிதம் யோ மிங் பங்குபற்றினார். அப்போது ரொன் ஆட்டெஸ்ட் பேசியதை கேட்டு, அடக்க முடியாமல் சிரித்தார். அந்த காட்சி அடங்கிய வீடியோ இணையத்தளங்களிலும் வெளியானது.


2010.07.11 ஆம் திகதி ரெடிட் எனும் சமூக வலைத்தளத்தில் டவுன்லோ கலைஞர் ஒருவர் பல்வேறு வேடிக்கை ஓவியங்களை வரைந்து வெளிட்டார்.

அதில் யோவ் மிங்கின் ஓவியமும் ஒன்றாகும். மேற்படி செய்தியாளர் மாநாட்டு வீடியோவில் யோ மிங் சிரித்த காட்சியொன்றின் ஸ்கிறீன் சொட்டை அடிப்படையாக வைத்தே அந்த ஓவியத்தை வரைந்ததாக டவுடன்லோ ஒப்புக்கொண்டார்.

அந்த ஓவியத்தின் வேடிக்கையான சிரிப்பு பலரையும் ஈர்த்தது. அவரின் பேஸ்புக் பக்கத்தை 13 இலட்சத்துக்கும் அதிகமானோர் லைக் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுப் பையன்

## "டிவிட்டர்" மூலம் பாவமன்னிப்பு



வத்திக்கானில் உள்ள போப் பிரான்சிஸ் நவீன காலத்திற்கு ஏற்ப இனி சமூக வலைதளமான டிவிட்டர் மூலம் பாவமன்னிப்பு அளிக்கவிருக்கிறார்.

இந்த தலைமுறையினரின் அன்றாட வாழ்க்கை முறையில் சமூக வலைத்தளம் மற்றும் இணையதளங்கள் ஆகியவற்றிற்கு முக்கிய இடம் உள்ளது.

இன்றைய நவீன உலகத்தில் பழைய முறைகளை அனைவராலும் பின்பற்ற முடியாத நிலை இருப்பதால் டிவிட்டர் மூலம் அனைத்து முக்கிய விடயங்களையும் உலக மக்களுடன் வத்திக்கானிலிருந்து போப் பகிர்ந்துக்கொள்கிறார்.

இதன் மூலம், வத்திக்கான் மற்றும் பிற இடங்களில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளை உலகெங்கிலும் உள்ள மக்கள் தெரிந்துகொள்வதற்கும் அவர்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கும் இது மிகவும் பயனுள்ளதாக இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

போப் பிரான்சிஸின் டிவிட்டர் கணக்கை இதுவரை 2.7 மில்லியன் மக்கள் பின்தொடர்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒரு கொலையின் கதை

12 (மாயன்)



இக்கொலைக் குற்றத்தை விசாரிக்கும் தந்திரோபாயத் திட்டம் உருவாக்கப்பட்டது.

ஏற்கனவே கூறியது போல குற்றவாளிகள் விட்டுச் சென்ற தடயங்கள் கையுறை, இரத்த மாதிரிகள், கைவிரல் அடையாளங்கள் மற்றும் கைத்தொலைபேசியொன்றினை மீள நிரப்பிய அட்டை ஆகியனவே. இவற்றுள் முதல் மூன்று தடயங்களும் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டால் அவர்களின் உடலுறுப்புக்கள் இந்தத் தடயற்களுடன் ஒத்துப்போகுமாக இருந்தால் மட்டுமே அவை காவல்துறை விசாரணைக்கு உதவி புரியும்.

எனவே அவை எந்த விதத்திலும் கொலையாளிகளைக் கைது செய்யும்வரை உதவி செய்யப் போவதில்லை என்பதை காவல்துறை புரிந்துகொண்டது. எனவே இறுதியாக இருப்பது கைத்தொலைபேசி மீள் நிரப்பு அட்டை மட்டுமே. அம் மட்டையும் கேதீஸின் கைத்தொலைபேசிக்கு மீள நிரப்பப் பட்டிருந்தால் அவ் அட்டையால் எவ்வித உதவியும் காவல்துறைக்குக் கிடைக்கப்போவதில்லை என்பதே.

எனவே இக்குற்றத்தை ஆராயும் பொருட்டு மூன்று காவல்துறை விசேட புலனாய்வுக் குழுக்கள் உருவாக்கப் பட்டன. அவற்றுள் இரு குழுக்கள் வெளிப்படையாக இயங்க மூன்றாவது குழு நிழற்படையாக இயங்கும் தந்திரோபாயம் வகுக்கப்பட்டது. வெளிப்படையாக இயங்கிய முதலாவது குழு திருமலைக் காவல்நிலையத்தில் இருந்து செயற்பட்டுக்கொண்டிருந்த புலனாய்வுப் பிரிவினரைக் கொண்டமைய ஏனைய இரண்டு குழுக்களும் விசேட அணிகளாக விசாரணைக்காக உருவாக்கப்பட்டன.

வெளிப்படையாக இயங்கும் குழுக்களின் கைகளில் தான் நிழற்படையாக இயங்கும் குழுவின் வெற்றி தங்கியிருக்கும் என்பதால் வெளிப்படையாக இயங்கிய குழுக்கள் இரண்டிற்கும் தெளிவான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. அவ் வெளிப்படைக் குழுக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிடமுள்ள தடணங்களின் வலுவைப் பற்றியோ அல்லது கொலைஞர்களை தாம் அண்மிக்கும் விடயங்களைக் கைப்பற்றியிருப்பதாகவோ எவ்வித தகவல்களையும் வெளிக்கசிய விடாது இருப்பதுடன் கொலைஞர்களை இயலுமான அளவிற்கு திசை திருப்பும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் பணிக்கப்பட்டிருந்தனர்.

அதனால் கொலைஞர்கள் காவல்துறை தடம்மாறிச் செல்வதை வெளிப்படையாகத் தெரிந்து கொண்டு தமது அடுத்த நடவடிக்கையினைக் காலந் தாழ்த்தியும் செல்வர் என எதிர்பார்க்கப்பட்டது.

ஏனெனில் நடந்த கொலையானது முன்னரே திட்டமிடப்படாமல் செய்யப்படவில்லை என்பதை கொலை நடந்த இடம் மற்றும் நேரத்தை கொலைஞர்கள் தெரிவு செய்திருந்த ஆற்றலும், கொலை செய்யும் போது முதலாவது கத்தி வெட்டால் வலது தாடையை பிளந்து கொலைசெய்யப்பட்டவரைக் சத்திமிடச் செய்யாமல் செய்வித்த நிபுணத்துவமும் கொலைஞர்கள் கொலையைதம் தொழிலாகச் செய்பவர்கள் என்பதை புலனாய்வாளர்கள் தெளிவறத் தெரிந்து கொண்டனர்.

இதனால் கொலைத் தடயங்கள் ஏதும் மாட்டுப்பட்டால் உடனடியாகத் தாம் என்ன செய்ய வேண்டும் என்னும் திட்டத்தையும் அவர்கள் கொண்டிருப் பார்கள் என்பதைப் புரிந்துகொண்ட புலனாய்வாளர்கள் கொலைஞர்களை எச்சரிக்கைப் படுத்தாமல் அவர்களை அனுக முடிவெடுத்திருந்தனர்.

இதற்கென ஆற்றலும், வாண்மையும் பொருந்திய இளம் உதவிக் காவல்துறை அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் அம் மூன்று பிரிவுகளும் செயற் படுத்தப்பட்டன..

19.04.2012 மாலை 6 மணியளவில் கேதீஸின் உடல் பிரேத பரிசோதனையின் பின் கையளிக்கப் பட்டது. அதனைப் பொறுப்பேற்று தமது வீட்டிற்கு எடுத்துச் சென்றனர் கேதீஸின் பெற்றோர்கள்.

கொலைக்கான காரணங்கள் என மக்கள் ஊகித்தவற்றில் இரண்டு காரணங்கள் பலராலும் நம்பப்படும் வகையில் இருந்தன. இரண்டுமே இரண்டு பெண்கள் சார்ந்தவை தான். முதலாவது ஊகிப்பாக இருந்தது கேதீஸின் மனைவியின் தங்கையின் காதல் தான்.

அப்பெண்ணின் மீது யாரோ காதல் கொண்டிருந்ததாகவும் அவன் கேதீஸ் மீது சந்தேகங் கொண்டிருந்ததாகவும் அதன் வெளிப்பாடாகவே இக் கொலை நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதாகவும் இருந்தது அந்த ஊகிப்பு. அதனை உறுதிசெய்வதற்காக வதந்தியாளர்கள் பரப்பிய உண்மைத் தகவல் யாதெனில் "இவர்கள் இருவரும் ஏன் 8.30 மணிவரை கடற்கரையில் இருந்தார்கள்" என்பதாக இருந்தது.

எனினும் அவ்வதந்தியாளர்களுக்கு இவர்கள் இருவருடனும் மேலும் ஒரு உறவினர் அங்கிருந்தமை தெரியவர நியாயமில்லை. அல்லது தெரிந்திருந்தாலும் கதைக்குச் சூடேற்றுவதற்காக அதனை அவர்கள் தவிர்த்திருக்கலாம்.

இரண்டாவது ஊகிப்பாக இருந்தது கேதீஸ் தனது உறவினர்



ஒருவரின் மனைவியாக நிச்சயிக் கப்பட்டவரை வெளி நாட்டிற்கு அனுப்புவதற்கான அனைத்து உதவிகளையும் செய்திருந்தார். எனினும் அப் பெண்ணை வேறு ஒரு இளைஞன் ஒருதலையாகக் காதலித்திருந்ததாகவும் அவ்விடயத்தை கேதீஸ் தெரிந்திருந்தும் அவ் உறவினப் பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்ப அவர் உதவி புரிந்ததால் இக் கொலை நிகழ்ந்திருக்கலாம் என்றும் பரவியது. அதனை உறுதிப்படுத்துவதற்காக வதந்தியாளர் சேர்த்த உண்மை விடயம் யாதெனில் கொலை செய்யப்பட்ட அன்று கேதீஸ் கொழும்பிலிருந்து அப் பெண் பயணிக்க இருக்கும் வெளி நாட்டுத் தூதுவராலயத்திற்கு அழைத்துச் சென்று மீண்டும் அழைத்து வந்திருந்தார். மரணவீட்டில் உலாவிய இரண்டு வதந்திகளையும் முதலாவது புலனாய்வுக்குழு திரட்டிக் கொண்டது. அதைத் தொடர்ந்து ஆரம்பக் கட்ட விசாரணைகளை முடுக்கியது முதலாவது விசாரணைக் குழு. அவ்விசாரணைகள் யாவும் தகவல்களைத் திரட்டி ஒழுங்குபடுத்தும் முயற்சியாகவும் அத் தகவல்களைத் தருபவர்களைப் பல்வேறு கோணங்களில் விசாரித்து மீண்டும் மீண்டும் தரப்பட்ட தகவல்கள் சரியானவையா என உறுதிப்படுத்து பவையாகவும், சந்தேகத்திற்கிடமாக யாரும் பதிலளித்திருப்பின் அவர்களில் கண் வைத்துக் கொள்வதற்காகவும் எனத் தொடர்ந்தது.

சித்திரை மாதம் 22ம் திகதி வரை விசாரணைகளுக்காகப் பலதடவைகள் கேதீசின் மனைவியின் முதலாவது தங்கை, கொலையை முதன்முதலில் கண்ணுற்ற கேதீஸின் மாமி அவரது தமக்கை, எனப் பலர் விசாரணைகளுக்காக பல தடவைகள் அழைக்கப் பட்டிருந்தனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## "ரியல் மாட்ரிட்" முதலிடம்



அதிக மதிப்புமிக்க ஐரோப்பிய கால்பந்து கிளப் அணிகளின் பட்டியலில், ஸ்பெயினின் "ரியல் மாட்ரிட்" அணி முதலிடம் பிடித்தது. ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள கிளப் அணிகளின் மதிப்பின் அடிப்படையில், இந்த ஆண்டுக்கான "டாப்-50" அணிகளின் பட்டியலை, போர்ப்ஸ் பத்திரிகை நேற்று வெளியிட்டது. இதில், ஸ்பெயினின் கால்பந்து கிளப் அணியான ரியல் மாட்ரிட் முதலிடம் பிடித்தது. இதன் மொத்த மதிப்பு ரூ.5379 கோடி.

## டி.ஆர்.எஸ் தீர்ப்பு "இங்கிலாந்து" பக்கம்

நடுவர் தீர்ப்பை மறுபரிசீலனை (டி.ஆர்.எஸ்.) செய்யும் முறையை சரியாக பயன்படுத்தாதது தான் அணியின் தோல்விக்கு காரணம் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆஷஸ் டெஸ்ட் தொடரில் நாட்டிங்காமில் நடந்த முதல் டெஸ்டில், இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. இது குறித்து அவுஸ்திரேலிய பத்திரிகைகளில் வெளியான செய்தி:

**தி ஏஜ்:** முதல் டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி செய்த 7 டி.ஆர்.எஸ்., முறைப்பாடுகள் தோல்வியில் முடிந்தன. இங்கிலாந்து, ஒன்றில் மட்டுமே தோற்றது. இதனால் தான் முடிவு எதிர்பார்ப்புக்கு மாறாக கிடைத்தது

**தி சிட்னி டெய்லி டெலிகிராப்:** ஸ்டுவர்ட் பிராட் டின்கையுறையில் பந்து பட்டு சென்றது நன்றாக தெரிந்த போதும், நடுவர் அலீம் தர் ஆட்டமிழப்பு தர மறுத்தார். அப்போது, அவுஸ்திரேலிய அணியிடம் டி.ஆர்.எஸ்., முறையில், முறைப்பாடு செய்யும் வாய்ப்பு இல்லை.


அதேநேரம், ஹாடின் துடுப்பு மட்டையில் பந்து லேசாக பட்டு சென்றது. இது பந்துவீச்சாளருக்கும் (ஆண்டர்சன்), அலீம் தாருக்கும் கேட்கவில்லை. ஆனால் டி.ஆர்.எஸ். முறையில் ஹாடினுக்கு ஆட்டமிழப்பு வழங்கப்பட, போட்டியில் தோல்வி நேரிட்டது.

இந்த முறை கொண்டு வந்ததே, துடுப்பாட்டக்காரர்கள் தவறான ஆட்டமிழப்பில் இருந்து தப்பிக்கத்தான். இப்போது இதை எப்படி பயன்படுத்துகிறோம் என்பதை பொறுத்து தான் வெற்றியே அடங்கியுள்ளது.

"மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி"

## "மட் - கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலய மாணவன் தேசிய மட்டத்திற்குத் தெரிவு"

மாகாண மட்டப் போட்டிகளில் குண்டு போடுதல் மற்றும் தட்டு எறிதல்ப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற கிண்ணையடி பாடசாலையின் மாணவன் தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகி உள்ளார்.



இப்பாடசாலையின் மாணவனான எஸ்.புகழரசன் 12.48 மீற்றர்கள் தூரத்திற்குக் குண்டு போட்டுள்ளார். மேலும் இப்பாடசாலையின் கரம் அணியினரும், கபடி அணியினரும் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

## "பீபா" பயிற்சி திருமலையில்

திருகோணமலை கால்பந்து லீக், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் என்பன இணைந்து சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் உதவியுடன் திருகோணமலையில் சிறுவர்களுக்கான கால்பந்தாட்ட பயிற்சிகளை நடத்தி வருகின்றது.




பயிற்றுனர்களைப் படத்தில் காண்க

# நிறைவுறும் வருடமொன்றின் நினைவுகள் - 2
# "மலைமுரசின் ஓராண்டுப் பயணம்"

- ஆசிரியர் -

அவரிடமே பதிப்புகளைச் செய்வதென்று முடிவானது.

அடுத்து மலைமுரசின் நிறுவனக் கட்டமைப்பையும், செயற்பாட்டுத் திட்டமிடலையும் மேற்கொண்டேன்.

நிறுவனக் கட்டமைப்பு என்பது பெரிதாக இருக்கப் போவதில்லை என்பது புரிந்தது. நான்கு இளைஞர்கள் உள்ள நிறுவனமொன்றின் கட்டமைப்பு பெரிய வடிவமொன்றையும் எடுக்காது. ஆகவே நான் பிரதம ஆசிரியராகவும், பவித்ரன் உதவி ஆசிரியராகவும் செயற்படுவது என்று தீர்மானமானது. ஏனைய இருவரும், அர்ஜீன் மற்றும் லக்ஸ்மன், அச்சக வேலைகளுடன் வெளிவள ஆளணியினராக (Outsourced) செயற்பட முடிவானது.

இக் கட்டத்தில் பவித்ரனைப் பற்றிச் சொல்ல வேண்டும். திருகோணமலையின் வளர்ந்து வரும் இலக்கியவாதியான அவர் இலக்கியச் செயற்பாடுகளில் திருமலை மாவட்டத்தில் முன்னின்று செயற்படுபவர். இரண்டு கவிதைப் புத்தகங்களை வெளியிட்டுள்ளார். பகிர்வுகள் போன்ற அமைப்புக்களில் அங்கத்தவர். அச்சமின்றி ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியராக பணியாற்றவரும் மனோதிடம் மிக்கவர்.

எமது திட்டப்படி முதலாவது பத்திரிகையாளர் சந்திப்பை ஏற்படுத்தியிருந்தார் பவித்ரன்.

22ம் திகதி மாலை 4 மணியளவில் 15 பத்திரிகையாளர்களைச் சந்திக்கும் எதிர்பார்ப்புடன் சிற்றுண்டி வகைகளையும் தயார்ப்படுத்திக் கொண்டு காத்திருந்தோம். முதலில் வருகை தந்தவர் ஆசிரியர் சசிகுமார். இரண்டாவதாக விபூசணன். மூன்றாவதாக.....நான்காவதாக.... ஐந்தாவதாக.... மன்னிக்கவும்! எவரும் வரவில்லை.

அவ்வளவும் தான். ஆனாலும் இவர்களுடனான சந்திப்பு பல விடயங்கள் பற்றிய கலந்துரையாடல்களாகவும் பத்திரிகைத் துறையின் இடர்ப்பாடுகள் தொடர்பாகவும் தெளிவான ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தியிருந்தது.

ஆசிரியர் சசிகுமார் முன்னரே "கோணைத் தென்றல்" என்ற ஒரு பத்திரிகையை நடத்தியிருந்தார்.

அந்த அனுபவப் பகிர்வின் போது பத்திரிகை என்பது, அதுவும் ஒரு பிரதேசப் பத்திரிகை என்பது, பெரும் போராட்டம் ஒன்றே என்பதைப் புரிந்து கொண்டேன். அதனை அன்றைய இரவில் சந்தித்த திருகோணமலையின் பத்திரிகைத் துறையின் வர்த்தகப் புள்ளியும் உறுதிப்படுத்தினார். திருகோணமலையில் நீண்டகாலமாகப் பத்திரிகை வியாபாரததுறையில் இருக்கும் ஒருவரைச் சந்தித்து சில அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்காக அன்றைய இரவில் அவரைச் சந்தித்தோம்.

அவ் வர்த்தகப் புள்ளிக்கு எம்மை ஒரு பத்திரிகை உருவாக்குனர்களாக ஏற்றுக்கொள்வதே கடினமாய் இருந்தது.

நானும் பவித்ரனும் மலைமுரசின் விடயத்தை ஆரம்பித்த உடனேயே அவர் இம் முயற்சி தோல்வி எனத் தெரிந்து கொண்டும் இறங்கும் இரண்டு முட்டாள்களுடன் பேசுவதற்கு தயாரில்லாமல் இருந்தார். எவ்வெவ் வார்த்தைகளால் எம்மை எமது திட்டத்திலிருந்து பின்வாங்கச் செய்ய முடியுமோ அந்த வார்த்தைகளைத் தெரிவு செய்து உபயோகித்தார்.

அங்கிருந்து வெளியே வரும் போது மனம் இன்னும் உறுதியாகியிருந்தது. "கட்டாயம் மலைமுரசு வெளிவர வேண்டும்"......

கால ஓட்டத்தில் அந்த வர்த்தகப் புள்ளி கூறிய விடயங்களில் ஒன்றான பொருளாதார அடிப்படையில் பத்திரிகையால் தாக்குப்பிடிப்பது என்பது கடினமான விடயம் எனப் புரிந்து கொண்டேன்.

அவர் பத்திரிகை சார்பாக முன்வைத்த வரவு செலவுக் கணக்கு மட்டுமே சரியாக இருந்தது. ஏனைய குறிப்புக்கள் யாவும் தனிமனிதனின் மன வலிமையில் தங்கியிருப்பது தெரிந்தது. ஒரு தனிமனிதனுக்கு நடந்தவற்றைப் பொதுமைப்படுத்திப் பார்க்க முனையும் போது மற்றோர் தனிமனிதனுக்கு அவ்விடயங்கள் பொருந்தாது எனத் தெளிவாகத் தெரிந்தது. மனவலிமையின் முன் மற்றெல்லாம் சிறிதாகவே இருந்தது.

அன்று ஜுலை மாதம் 23ம் திகதி பதிப்பக நிலையத்துடன் பேசிய பொழுது பத்திரிகை வெளிவரும் நாளுக்கு முதல் நாள் காலை 10 மணிக்கு முன்பாக அவர்களுக்கு பத்திரிகையைப் பதிப்பிற்காக அனுப்பி வைக்க வேண்டும் என்பது முடிவாயிற்று. அவ்வாறாயின் 28ம் திகதி பத்திரிகை தயாராக இருக்க வேண்டும். திடீரென நாட்கள் தறிகெட்டு ஓடுவதைப் போல இருந்தது. 23ம் திகதி இன்று. இருப்பதோ இன்னும் நான்கு நாட்கள் ... சாத்தியப்படுமா?... சாத்தியப்பட்டது.

வேலை முறை வடிவமைப்பு இப்படித்தான் இருந்தது. செய்திகளை நானும், கட்டுரைகளை பவித்ரனும் மீள வடிவமைத்து எஸ் எஸ் டிஜிட்டல்ஸ் நிறுவனத்திடம் தட்டச்சுக்காக அனுப்புவது. அவர்கள் தட்டச்சு செய்து இலத்திரனியல் அஞ்சலிடும் விடயங்களை மீள வாசித்து திருத்தி திரும்பவும் அவர்களுக்கே அனுப்பிவைக்க அவர்கள் அதனை பத்திரிகையின் பக்கங்களில் அடுக்குவார்கள். எந்த விடயம் எந்தப் பக்கத்தில் வர வேண்டும் என்பதை நாம் இலக்கமிட்டு அனுப்புவோம். இதுவே எமது வேலைப் போக்காக (working style) இருந்தது.

செய்திகளுக்காக அலையத் தொடங்கிய திகதி 25ம் திகதி.... அன்றை இரவு முதலாவது செய்தியை பத்திரிகையில் இட்டோம்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 500 மில்லியன் ....

அத்துடன் கிழக்கு மாகாணத்திற்கென தனியானதொரு வீடமைப்பு அதிகார சபையையும் நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போதுவரை கிழக்கிற்கு என தனியானதொரு வீடமைப்பு அதிகார சபை இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ் அதிகார சபையின் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகளைப் பெற்று கிழக்கில் வீடிழந்துள்ள மக்களுக்கு வீட்டு வசதிகளை உருவாக்கிக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்பதை அமைச்சரவையில் குறிப்பிட்ட கிழக்கின் வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன, வீடமைப்பு, நிர்மான, கிராமிய மின்சார மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் உதுமா லெப்பை அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரமும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் சம்மாந்துறையிலுள்ள ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை ஆயுர்வேத மாவட்ட வைத்திய சாலையாகத் தரமுயர்த்தவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

## மூதூர்க் கொலைச் சாட்சிகளின்....

மூதூரில் 2006ம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான போரின் போது பிரான்ஸின் தன்னார்வத் தொண்டு நிறுவன மூதூர் அலுவலகத்தில் தஞ்சமடைந்திருந்தபோது மிருகத் தனமாகக் கொல்லப்பட்ட அக்ஷன் பெய்ம் நிறுவனத்தின் பதினேழு தன்னார்வத் தொண்டர்களின் கொலை தொடர்பான சாட்சிகளைப் பட்டிய லிடுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்று வதற்காகவென அமைக்கப்பட்ட தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் வேண்டுகோளுக்கு அமைய குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இக் கொலைகள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ் விசாரணைகள் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்படும் முடிவுகள் அற்றோனி ஜெனரலுக்கு மேலதிகச் சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சனாதிபதியின் செயலாளரும் தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் செயலாளருமான லலித் வீரதுங்க தெரிவித்தார்.

## வன்புணர்வுக்குக் கூலி 100.00

வன்புணர்வுக்குக் கூலியாக 100 ரூபாவை வழங்கிவிட்டுத் தலை மறைவாகியுள்ள முதியவரைத் தேடி காவல்துறை வலை வீசியுள்ளது.

மாலை 5 மணியளவில் தனியாகத் தனது வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த 9 வயதுச் சிறுமியை அவ்வழியால் வந்த முதியவர் அருகிலுள்ள பாழடைந்த வீட்டிற்குள் இழுத்துச் சென்று வன்புணர்ந்து விட்டு வெளியெ சொல்ல வேண்டாம் எனக் கூறி 100 ரூபாவைக் கொடுத்துவிட்டுக் கிழவர் தலைமறைவாகியுள்ளார்.

அழுதபடி வீட்டிற்கத் திரும்பிய மகளிடம் விடயத்தைக் கேட்டறிந்து கொண்ட தாய் காவல்துறைக்குப் புகாரளித்துள்ளார்.

அம்பாறையில் வினாயகபுரம் பகுதியில் இச் சம்பவம் நடந்துள்ளது சிறுமி வைததியசாலையில் உள்ளார்

## சுவாமி விபுலானந்தரின் 66வது சிரார்த்த தினம்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் அறுபத்தி யாறாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை கல்லடி உப்போடை ராமகிருஸ்ண மிஷன் விபுலானந்தர் மணி மண்டபத்தில் அமைந்துள்ள சுவாமியின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபையின் ஏற்பாட்டில் இம் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நூற்றாண்டு விழாச்சபையின் தலைவர் பேராசிரியர் மா.செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் சி.மௌனகுரு, மட்டக்களப்பு சிவில் பாதுகாப்பு குழுவின் தலைவர் மாமாங்கரசா, கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்தா இசை நடனக்கல்லூரி உப வேந்தர் ந.பிரேம்குமார், முன்னாள் மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்ற உதவி ஆனையாளர் காஸிபதி நடராஜா , நூற்றாண்டு விழாச் சபையின் செயலாளர் ஜெயராஜா உட்படப் பெரும் திரளான பாடசாலை மாணவர்கள், ஆசிரிய ஆசிரியர்கள், சமூக ஆர்வளர்கள் என பலரும் கலந்து கொண்டு சுவாமி விபுலானந்த அடிகளாரின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

அதேவேளை இச் சிரார்த்த தின நினைவாக திருகோணமலை இராம கிருஸ்ண மிஷன் ஶ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் மாணவர்களிடையே நினைவு தின நிகழ்வும் தமிழ்மொழித் தினத்தில் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களு க்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வுகள் கல்லூரி அதிபர் திரு பத்மசீலன் தலைமையில் நடாத்தப் பட்டன. பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற உவர்மலை விவேகானந்தா கல்லூரி அதிபர் சி. நவரத்தினமும் கௌரவ அதிதியாக ச.விக்னராஜாவும் கலந்த சிறப்பித் திருந்தனர்.







திருமலை பூ.பிரதிபனின்

"செவ்வானம்"

கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும்,
இசையும் நாடகமும் அடங்கிய கலைநிகழ்வுகளும்.




பிரதமவிருந்தினர்
திரு. சி.தண்டாயுதபாணி
எதிர்கட்சி தலைவர் மாகாணசபை உறுப்பினர்
கிழக்கு மாகாண சபை

மற்றும் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
காலம் : 20-07-2013 மாலை 4:30 மணி


## கூட்டமைப்புக்குப் புதிய தலைமை?

வடமாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர் இழுபறியால் கட்சித் தலைமையை மாற்றுவோம் என தமிழரசுக் கட்சியினர் குரலெழுப பியுள்ளனர். மாவையை முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்காவிட்டால் தமழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவை உடனடியாகக் கூட்ட வேண்டும் என அவர்கள் தெரிவித்ததுடன், அவ்வாறு கூட்டி கட்சித் தலைமையை மாற்றும் முடிவைத் தாம் எடுக்கவுள்ள தாகவும் தெரிவித்துள்ளனர்.

## கஞ்சாவுடன் கைதானார் பிக்கு

கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்ட பிக்கு ஒருவரைக் காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர். கதிர்காமத்திலிருந்து மாத்தறைக்கு இவர் கஞ்சாக் கடத்தலில் ஈடுபடுவதை ஒற்றன் மூலம் அறிந்து கொண்ட காவல்துறையினர் கடத்தலில் ஈடுபட்ட போது கையும் களவுமாக அவரைக் கைது செய்துள்ளனர்.

## பிரிவினை வாதத்தை எதிர்க்கும் சத்தியக் கடதாசி கட்டாயம் – தேர்தல் ஆணையாளர்.

மாகாணசபைத் தேர்தலின் வேட்பாளர்கள் கட்டாயமாக பிரிவினை வாதத்தை எதிர்ப்போம் என்ற சத்தியக் கடதாசியை சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## வடக்கின் தேர்தலில் கே.பி தமிழினி அவுட்

வடக்கில் தனித்துப் போட்டியிடவுள்ள சுதந்திரக் கட்சியின் பட்டியலில் கே.பியும் தமிழினியும் சேர்க்கப்படவில்லை. தயா மாஸ்டருக்கு வாய்ப்பிருக்கும் போல் தெரிகின்றது.

## யாழில் காவல்துறை காவலரண்கள் அதிகரிப்பு:

தேர்தலை முன்னிட்டு யாழில் காவல்துறை காவலரண்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக பிரதேச காவல்துறை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்புக் காரணங்களால் கேரளாவைக் கைவிட்ட பஷில்

இந்தியாவிற்குப் போன பஷில் பாதுகாப்புக் காரணங்களால் கேரளாவிற்குச் செல்லவில்லை. கேரளாவில் உள்ளுராட்சிசபைகளுக்கு எவ்வாறு அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன என்பதை அறிய அவர் முயன்றதாகவும் அதற்குக் கைகூடவில்லை என்றும் தெரிய வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம்

I. புவியியல் அங்கிகளின் நிலவுகைக்கு முக்கியமாக அமைவது சூரியனும், பச்சைத் தாவரமும் ஆகும்.

1. சூரியனிலிருந்து புவியை அடையும் பிரதான இரு சக்தி வகைகளையும் குறிப்பிடுக.
2. ஒளித்தொகுப்பு என்றால் என்ன?
3. ஒளித்தொகுப்புக்கு தேவையான காரணிகளை தாவரம் எங்ஙனம் பெறுகின்றது?
4. ஒளித்தொகுப்பிற்கான இரசாயன சமன்பாட்டைத் தருக.
5. இலையினுள்ளே நீரை வினைத்திறனாக விநியோகிப்பதற்கு தாவரம் எங்ஙனம் இசைவடைந்துள்ளது?
6. ஆவியுயிர்ப்பு மீது செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை?
7. ஆவியுயிர்ப்பை குறைப்பதற்கு செதிலிலைகளைக் கொண்டு காணப்படும் தாவரம் எது?
8. ஒளித்தொகுப்பின் போது இலைகளில் மாப்பொருள் சேமிக்கப்பட்டுள்ளது என்பதை சோதித்தறிய ஏன் அத் தாவரத்தை 48 மணிநேரம் இருட்டில் வைக்க வேண்டும்?
9. மேற்குறிப்பிட்ட பரிசோதனையில் அயடினை கரைக்கப்பயன்படும் இரசாயன பதார்த்தம் எது?
10 ஒளித்தொகுப்பினால் சூழல் சமனிலை எவ்வாறு பேணப்படுகிறது?


II. எரிசோடா என்பது சவர்க்கார உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் ஓர் இரசாயனப்பொருளாகும். $(Na-23, O-16, H-1)$

1. எரிசோடாவின் இரசாயன சூத்திரத்தை தருக.
2. எரிசோடாவின் நீர்க்கரைசல் அமிலமா, காரமா, உப்பா எனக் குறிப்பிடுக.
3. இதிலடங்கியுள்ள பிணைப்பு வகை யாது?
4. எரிசோடாவிற்கும், ஐதான $Hcl$ இற்குமிடையிலான தாக்கத்திற்கான சமப்படுத்திய சமன்பாட்டைத் தருக.
5. சவர்க்கார உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் எரிசோடா தவிர்ந்த ஏனைய மூலப்பொருள் யாது?
6. வன்னீரில் ஏன் சவர்க்காரத்தினை உபயோகிப்பது கடினமாகும்?
7. மேற்காட்டப்பட்ட இடர்பாட்டினை நீக்கும் பொருட்டு இரசாயன முறையில் தொகுக்கப்பட்ட துப்பரவாக்கிகளில் காணப்படும் அயன்கள் எவை?
8. விலங்குகளின் கொழுப்பு, தேங்காயெண்ணெயில் காணப்படும் அமிலங்களைக் குறிப்பிடுக.
9. சவர்க்காரம் எவ்வாறு அழுக்கு அகற்றுவதில் ஈடுபடுகிறது?
10 சவர்க்கார கரைசலினுள் பினோப்தலின் காட்டியை சேர்க்கும் போது ஏற்படும் நிறமாற்றம் யாது?

III. வானொலி, தொலைக்காட்சி, கணணி போன்றவற்றில் அதிகளவான இலத்திரனியல் கூறுகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. இயற்கையான குறைகடத்தி திரவியங்கள் 2 தருக.
2. ஒளிப்புலங்கூர்மை இருவாயிகள் குறை கடத்திச் சந்தியில் ஒளிப்புலங் கூர்மையை அதிகரிக்க சேர்க்கப்படும் இரசாயனப் பதார்த்தம் எது?
3. திரான்சிற்றரை கண்டுபிடித்தவர்கள் யாவர்?
4. திரான்சிற்றரின் பிரதான தொழிற்பாடுகள் யாவை?
5. ஆடலோட்டத்தை நேரோட்டமாக மாற்றும் உபகரணம்எது?
6. நீர் மேலே குறிப்பிட்ட உபகரணத்தில் காணப்படும் இலத்திரனியல் கூறுகளை வரைந்து காட்டுக.
7. மேலே நீர் குறிப்பிட்ட உபகரணத்தில் நேரோட்டத்தின் அலை வடிவத்தை அறிய பயன்படும் உபகரணம் எது?

III. வானொலி அலை ஊடுகடத்தலின் கட்டமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.




1. $A, B, C, D, E$ ஆகியவற்றை குறிப்பிடுக.
2. $B$ எனும் அமைப்பினுள் நடைபெறும் செயற்பாடு யாது?
3. மேற்காட்டப்பட்ட செயற்பாடு இரு வழிகளில் நடைபெறுகிறது. அவை எவை?
4. நுணுக்குப் பன்னி, தொலை பன்னி ஆகியவற்றில் நடைபெறும் சக்தி மாற்றத்தைக் குறிப்பிடுக.

### பாடம் - கணிதம்

I. ஜதின்ஜா நிறுவனத்தில் இருந்து ரூபா 225000 ஐ 20வீத ஆண்டு வட்டியில் 25 சம மாதாந்தக் கட்டணங்களில் செலுத்த வேண்டும்.

1. ஒரு மாதத்தில் செலுத்தப்படும் பணம் எவ்வளவு?
2. ஒரு மாத கடன் பணத்துக்கான வட்டி எவ்வளவு?
3. மாத அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவு?
4. மொத்த வட்டித் தொகையைக் காண்க.

II.

1. காரணிப்படுத்துக. $3a^2-27$
2. காரணி அறிவைப் பயன்படுத்தி சுருக்குக.
$$\sqrt{52.5\times 47.5+6.25}$$
3. $\sqrt{3}=1.732$ எனின் $\sqrt{108}$ இன் பெறுமானம் காண்க.
4. சுருக்குக. $\dfrac{3^{-2}\left(5^0+2^3\right)}{2\times 9^{1/2}}$

III.

1. $\log_{10}x+\log_{10}4=\log_{10}(x+28)-\log_{10}2$ இன் பெறுமானம் காண்க.
2. ஒரு செவ்வகத்தின் பரப்பளவு . நீளத்தை 3 மீற்றரினால் குறைத்தும் அகலத்தை 2 மீற்றரினால் கூட்டிய போது செவ்வகம் சதுரமானது. செவ்வகத்தின் நீள அகலங்களை $x, y$ எனக் கொண்டு
அ. $x, y$ என்பவற்றைக் காண்க.
ஆ. சதுரத்தின் பரப்பளவிற்கும் செவ்வகத்தின் பரப்பளவிற்கும் இடையிலான விகிதத்தைக் காண்க.

IV. கோடாத தாயக்கட்டை ஒன்றின் முகங்கள் 1, 2, 2, 2, 3, 3 என இலக்கமிடப்பட்டுள்ளது. இத் தாயக்கட்டையை இருமுறை உருட்டும் போது பெறப்படும் நிகழ்ச்சிகளின் மாதிரிவெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

பின்வரும் நிகழ்ச்சிகளுக்கான நிகழ்தகவைக் காண்க.
1. இரு முறைகளிலும் ஈட்டுக்களின் கூட்டுத்தொகை முதன்மை எண்ணாக இருத்தல்.
2. இரு முறைகளிலும் ஈட்டுக்களின் கூட்டுத்தொகை சதுர எண்ணாக இருத்தல்.
3. இரு முறைகளிலும் ஒரே எண்ணாக இருத்தல்.

### சென்ற வார விடைகள்

1) 1. 120 2. 1500.00

2) 1. $a(a+2b)$ 2. $240cm^2$

3) $12/13$

4) 1. $360-(95+65+80)=120^\circ$ 2. 10800.00

5) 1. 15000.00 2. 8%

6) 1. அதிக தடவை தோன்றும் ஈட்டு 23
2. மூன்றாம் காலணை - முதலாம் காலணை
= 9வது ஈட்டு - 3வது ஈட்டு = 15

7)
$$\left(x-\tfrac{1}{x}\right)^2=y^2$$
$$x^2-2+\tfrac{1}{x^2}=y^2$$
$$x^2+\tfrac{1}{x^2}=y^2+2$$

(8) 1. $\pm 14xy$
2. $(x\mp 7y)^2$

(9) $40^\circ$

(10) $3\times\frac{y}{3}=3\times\frac{x}{2}+3\times 1$
$y=\frac{3}{2}x+3$

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர் குழு,
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியங்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசமுரசு

## தூங்குவது குற்றம் – ரமதான் அப்துல்லா

துபாய் மெட்ரோ புகையிரதத்தில் பயணம் செய்யும்போது தூங்குவது குற்றம் என அறிவிக்கப்பட்டுள்ளது. புகையிரதம் ஒரு பொதுச் சொத்து. பொது சொத்துக்களில் தூங்குவது தடை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார், துபாய் புகையிரத திட்டமிடல் இயக்குனர் ரமதான் அப்துல்லா. அவர் மேலும் தெரிவிக்கையில், துபாயில் புகையிரதத்தில் மட்டுமல்ல, காத்திருக்கும் பகுதிகள் தரிப்பிடம் ஆகியவற்றிலும் தூங்குவது குற்றம் என்றார்.

## காணாமல் போன 5700 பேர் இறந்து விட்டார்கள் – உத்தரகாண்ட் அரசு

வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி காணாமல் போனவர்கள் என அறிவிக்கப்பட்டிருந்த 5700 பேர் இறந்து விட்டதாக உத்தரகாண்ட் அரசு கடந்த திங்கட்கிழமை அறிவித்துள்ளது. காணாமல் போன இவர்களை கண்டுபிடிக்க இன்றுவரை காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது. உத்தரகாண்ட் மாநிலத்தில் கடந்த மாதம் ஏற்பட்ட தொடர் மழை மற்றும் நிலச் சரிவுகளில், புனிதப்பயணம் மேற்கொண்ட பக்தர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இந்த மழையால் பத்ரிநாத், கேதார்நாத் ஆகிய புனித தலங்களும், நூற்றுக்கணக்கான கிராமங்களும் அழிந்தன. அத்துடன் ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போனார்கள். மொத்தம் 5,700 பேரை காணவில்லை என்று மாநில அரசு அறிவித்து இருந்தது.




## பனாமா கால்வாயில் சிக்கிய ஏவுகணைகள் வடகொரியாவினுடையது !



வட கொரியாவில் பதிவு செய்யப்பட்ட சரக்கு கப்பல் ஒன்று பனாமா கால்வாயின் சென்று கொண்டிருந்தபோது சோதனையிடப்பட்டதில், ஏவுகணைகள் கடத்திச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கப்பலில் இருந்த சக்கரை மூடைகளுக்கு கீழே கனரக வாகனங்களில் ஏவுகணைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கப்பல் கியூபாவில் இருந்து வடகொரியா நோக்கி சென்று கொண்டிருந்ததாக, கப்பலில் கிடைத்த ஆவணங்களில் இருந்து தெரியவந்துள்ளது. வழமையாக, பனாமா கால்வாயில் வேறு நாடுகளுக்கு செல்லும் கப்பல்களை பனாமா கடற்படை சோதனையிடுவது வழக்கம் இல்லை. ஆனால், தமக்கு வெளிநாட்டு உளவுத்துறை ஒன்றிடம் இருந்து கிடைத்த உளவுத் தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டது என்று பனாமா அரசின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

கப்பல் சோதனையிடப்பட்டபோது, அதில் 35 மாலுமிகள் இருந்தனர். அவர்கள், சோதனை அதிகாரிகளுடன் வன்முறையில் ஈடுபட முயன்றதால், கைது செய்யப்பட்டு பனாமாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்



## இலங்கையின் மனித உரிமைகள் – இங்கிலாந்து அறிக்கை


இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்களில் தொடர்ந்தும் தாம் கரிசனை கொண்டிருப்பதாக இங்கிலாந்து தெரிவித்துள்ளது. வெளிநாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகளின் மனித உரிமை அறிக்கையில் இலங்கை தொடர்பாக இக் கருத்தை இங்கிலாந்து தெரிவித்துள்ளது.

இவ் அறிக்கையில் இலங்கையின் மனித உரிமை நிலைகள் தொடர்பாகச் சாதகமான மற்றும் பாதகமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கையின் மனித உரிமைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தடுப்பிலுள்ளவர்கள் தொடர்பாக மத்தியமயப்படுத்தப்பட்ட தகவற் தளமொன்றைப் பேணுவதாக உறுதியளித்தார். அத் தகவற்தளம் தற்போது 1,628 தடுப்பாளர்களின் விபரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளமையை இவ் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. எனினும் அத்தகவற்தளத்தை எல்லோராலும் பார்வையிட முடியாமலிருப்பதையும் அறிக்கை சுட்டி நிற்கின்றது. தமிழ்ப் பிரதேசங்களில் நிலத்தை அரசு சுவீகரிப்பது தொடர்பாகவும் அவ் அறிக்கை தகவல்களைக் கொண்டுள்ளது


## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – ௨௪

பிரதீபா

1. 00:00 மணித்தியாலம் என்பதை சாதாரண நேரத்தில் எழுதினால்
   1. நண்பகல் 12.00 2. நள்ளிரவு 12.00 3. முற்பகல் 12.00
2. மார்ச் 20ந் திகதி தொடக்கம் மே 10ஆம் திகதி வரை உள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?
   1. 50 2. 51 3. 52
3. அசேதனப் பசளை அல்லாதது
   1. யூரியா 2. அமோனியா 3. கூட்டெரு
4. "எப்பாடு பட்டும் செல்வத்தை சேர்" என்ற கூற்றுக்கு பொருத்தமான பழமொழி யாது?
   1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
   2. நனைந்தவனுக்கு கூதல் என்ன குளிர் என்ன?
   3. திரை கடலோடியும் திரவியம் தேடு
5. "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற பழமொழியின் சரியான கருத்து யாது?
   1. மனம் விரும்பினால் யாருக்கும் உதவலாம்.
   2. மனநிறைவே சிறந்த செல்வமாகும்
   3. மனத்திருப்தி
6. "பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல" என்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சி எது?
   1. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் காந்தனுக்கு தந்தை புத்தகங்கள் சிலவற்றை பரிசாகக் கொடுத்தல்.
   2. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் பாலனுக்கு பந்தொன்று பரிசாகக் கிடைத்தல்
   3. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் மாலதிக்கு தொலைக்காட்சி பார்ப்பதற்கு தடை விதித்தல்.
7. பின்வருவனவற்றுள் இரட்டைக் கிளவி அல்லாதது எது?
   1. கலீர்கலீர் 2. விழுந்துருண்டு 3. சுள்சுள்
8. 'ஐ' எனும் ஓரெழுத்துச் சொல்லுக்கான பொருள் அல்லாதது?
   1. மேன்மை 2. அழகு 3. மென்மை
9. செங்கோணத்திலும் பெரியதைக் காட்டும் நேரம் எது?
   1. 3 மணி 2. 6.30 மணி 3. 9.10 மணி
10. இடைவெளியில் பொருத்தமான எண்ணை தெரிக.




   1. 88 2. 47 3. 90
11. ஒரே கருத்தைத் தரும் இரண்டு சொற்களைக் கொண்ட விடையைத் தெரிக.
    1. அடிவானம் - செவ்வானம் 2. அடிவானம் - கீழ்வானம்
    3. அடிவானம் - வானவில்
12. மின்காந்தம் பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
    1. மின்மணி 2.நீராவிப்படகு 3. மின்குள்
13. அச்சு இயந்திரம் ஒன்றினால் ஒரு நிமிடத்திற்கு 10 பிரதிகள் அச்சடிக்கப்படும். அவ் அச்சு இயந்திரத்தினால் கால் மணித்தியாலத்தில் அச்சடிக்கப்படும் பிரதிகளின் எண்ணிக்கை யாது?
    1. 1500 2. 150 3. 60
14. பண்ணை ஒன்றில் 200 மாடுகளும், 305 முயல்களும், 200 தாவரங்களும், 325 கோழிகளும் உள்ளன. இப்பண்ணையில் அதிகம் காணப்படுபவை?
    1. மிருகங்கள் 2. பறவைகள் 3. பிராணிகள்
15. இக்கடிகாரம் காட்டும் நேரத்தை ஒருவர் முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது இக்கடிகாரம் காட்டும் நேரம் யாது?



    1. 6மணி 10நிமிடம் 2. 7மணி 50 நிமிடம் 3. 6மணி 50நிமிடம்.

பெயர்: ........................................................................
........................................................................

முகவரி: ........................................................................
........................................................................
........................................................................

பாடசாலை: ........................................................................

## ரிங்கோ ஸ்ரேசனர்ஸ் வழங்கும் பரிசுகளை வெல்லுங்கள்

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

கடந்த வார வினாக்களுக்கான விடைகள்

1. 1 2. 1 3. 2 4. 1 5. 1 6. 1 7. 2 8. 2
9. 3 10. 1 11. 2 12. 1 13. 2 14. 1 15. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உணரப்படாத தீமைகள்

இஸ்லாமிய மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்று திருமணமாகும்.

இன்றைய நாகரீகத்தின் வளர்ச்சியில் இறையச்சம் இன்மை காரணத்தால் அது பொழுது போக்காகி விட்டன. இஸ்லாமிய மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட முறையில் அமைதி மற்றும் நிம்மதியின் நிழலில் தூய்மை, அன்பு, கற்பு ஆகியவற்றின் படியில் இஸ்லாம் அனுமதித்துள்ள முறையானது திருமணமாகும்.

"திருமணத்தின் நிச்சயதார்த்தத்தின் அடிப்படையில் நீ ஆடவர் முன்னால் வரலாம்" அதாவது மனம்புரிய விரும்பும் ஆண் தனக்கு நிச்சயதார்த்தம் பேசப்பட்ட பெண்ணை திருமணத்திற்கு முன்னால் பார்ப்பதை இஸ்லாம் அனுமதித்துள்ளது. ஏனெனில் அது அவர்களுக்குள் இணக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும் என அன்னல் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்.

இன்றைய இளம் சகோதர சகோதரிகள் இறையச்சம் இல்லாத காரணத்தால் தனக்கான வாழ்க்கையை தேடும் பயணத்தை தாமே ஆரம்பிக்கின்றனர். இதன் பின்விளைவை இவர்கள் யோசிப்பதில்லை. தான் தேடும் வாழ்க்கை தனக்கு கிடைக்காவிட்டால் தனக்குத் தானே பலிதீர்த்துக் கொள்கின்றார்கள்.

நம் சமூகத்தில் இப்படிப்பட்ட வாலிப சகோதர சகோதரிகள் தற்கொலை செய்து கொண்டு தங்களை தாங்களே அழித்துக் கொள்கின்றார்கள். இன்னும் சிலரை தந்தைமார்களும், சகோதரர்களும் தற்கொலை செய்ய தூண்டுவதோடு இன்னும் இப்படிப்பட்ட எத்தனையோ பேர் பைத்தியம் பிடித்து அறிவை இழந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர். இதற்கெல்லாம் இஸ்லாமிய அறிவும் அல்லாஹ் பற்றிய இறையச்சம் இல்லாமையும் தான் காரணமாகும்.

நம் சமூக வாலிப சகோதர சகோதரிகள் தவறான போக்கில் சிந்திக்கிறார்கள். அவர்களை கண்காணித்து கொண்டிருப்பது பெற்றோரும், சகோதரர்களும் நம் சமூகத்தாரும் தான் என்று கருதுகின்றனர். இந்நிலையில் அவர்கள் தனது அறைக்கதவுகளை அடைத்துக் கொள்கின்ற போது கண்காணிப்பிலிருந்து அனைத்து வாசல்களும் அடைபட்டு போய்விட்டன. அறையில் நாம் மட்டும் தான் இருக்கின்றோம் என்ற எண்ணுகின்றனர். ஆனால் அவர்களை படைத்தவனும் அதிபதியுமான இறைவன் கண்காணித்துக் கொண்டிருப்பதை மறந்துவிடுகின்றார்கள். இதனை அல்லாஹ் அல் குர் ஆனில் கூறுகின்றான் "தின்னமாக அவன் இரகசியமாய் பேசுவதையும் அதைவிட மறைவானதையும் அறிகின்றான் (20:7)" மேலும் "நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கின்றான் (57:4).

மனிதமனம் இருவகையானது. ஒன்று தூய மனம். இரண்டாவது தீய மனம். தீய மனம் என்பது இழிவான காரியங்களை செய்யத் தூண்டுவதாகவும் தூய மனம் நற் காரியங்களை செய்யத் தூண்டுவதாகவும் இருக்கின்றது. நிச்சயமாக உலக வாழ்க்கைக்கு ஒரு முடிவு உண்டு. கால அவகாசம் வரையறுக்கப்பட்ட ஒன்றாகும். இவை உண்மை என முஸ்லீம்களாகிய நாம் உள பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளோம். பாவச்செயல்களைச் செய்தால் இதன் இறுதி எவ்வாறு முடியும் என்று எப்போதும் இவர்கள் சிந்திப்பதில்லை. மரணம் திடீர் என வருகிறது. திடுமென நம்மை பிடித்துக் கொள்ளும் என்பதை மறந்து விடுகிறார்கள் இவர்களுக்கு இறையச்சம் இல்லாத காரணத்தால் தான் செய்வன யாவும் சரியென நினைத்துக் கொள்கின்றார்கள்.

அல்லாஹ் அல்குர் ஆனில் பின்வருமாறு கூறுகிறான். "ஒரு வினாடி கூட உன்னைக் குறித்து கவனம் அற்றவனாக இல்லை. ஏனெனில் அவன் தூங்குவதுமில்லை சிற்றுறற்மும் அவனைப் பிடிப்பதில்லை. (2:225)

இவற்றை இவர்கள் அறிந்து இருந்தால் அல்லாஹ்வுக்கு கோபம் ஊட்டக்கூடிய எந்த செயலையும் செய்யமாட்டார்கள். 1மீ அகலமும் 2மீ நீளமும் உடைய இருள் சூழ்ந்த மண்ணறையில் வைக்கப்படும் பொழுது என்னதான் செய்யமுடியும் அந்த மண்ணறை நரகப்படுகுழியாக இருக்குமா? அல்லது சுவனத் தோட்டமாக இருக்குமா?

அல்லாஹ் குர்ஆனில் "தாங்கள் செய்தவை அனைத்தும் தங்கள் முன்னால் இருப்பதை அவர்கள் காண்பார்கள், மேலும் உம் அதிபதி எவருக்கும் அநீதி இழைக்கமாட்டான்" (18:49.

நம் சகோதரர்கள் நற்பாக்கியத்துக்குப் பதிலாக துர்ப்பாக்கியத்தையும், மன நிம்மதிக்குப் பதிலாக கஷ்டத்தையும், மகிழ்ச்சிக்குப் பதிலாக கவலையும் காதல் எனும் பெயரில் கொள்முதல் கொள்கிறார்கள்.

தங்களுடைய அழகை தினப்பத்திரிகைகளுக்கும், மாத வார இதழ்களுக்கும் விற்பதையும், தங்களுடைய குரல்களை சினிமாக்காரர்களுக்கு விற்பதையும், தங்களுடைய சிரிப்பு, உன்னத வாழ்வு, சுவன பாக்கியம் ஆகியவற்றை பொருட்படுத்தாமல் செய்பவர்கள் அவற்றையெல்லாம் பின்பற்றக்கூடாது எனத் தெரிந்து கொண்டால் சுவன பாக்கியத்தைக் கிட்டலாம்.

இறையச்சம் இல்லாத சகோதர சகோதரிகள் சொற்ப இவ்வுலக இன்பத்திற்காக தன் வாழ்க்கையை தியாகம் செய்கிறார்கள். இவர்களின் நிலை மறுமையில் எவ்வாறு இருக்கப்போகின்றதோ!

இதனை அல்லாஹ் அல்குரி ஆனில் குறிப்பிடுகின்றான். "நாமே மனிதனை படைத்தோம். அவனது உள்ளங்களில் எழுகின்ற உணர்வுகளையும் கூட நாம் அறிகிறோம். மேலும் அவனது பிடரி நரம்பை விடவும் நாம் அவனிடம் நெருக்கமாக இருக்கின்றோம்." (50:16)

என் கன்னியத்துக்குரிய சகோதர சகோதரிகளே, நீங்கள் பயன்மிகு கல்வியைத் தேடுங்கள். அதுவே அல்லாஹ்வின் பக்கம் உங்களுக்கு நெருக்கத்தைத் தரும் அவனது கோபத்தை விட்டும் உங்களைத் தூரமாக்கும்.

- பாத்திமா றிஸ்மியா-
அக்கரைச்சேனை

# தொழுகை பற்றிய ஹதீஸ்கள்

நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்

- "என்னுடைய உம்மத்தினர் மீது முதன் முதலாக தொழுகையைத்தான் அல்லாஹ் கடமையாக்கினான். கியாமத் நாளில் முதன் முதலாக தொழுகையைப் பற்றித்தான் விசாரிக்கப்படும்.
- இஸ்லாத்தின் அடையாளம் தொழுகையாகும். தூய்மையான மனத்துடன் முஸ்தஹப்புகளைப் பேணி அந்தந்த நேரங்களில் தொழுது வருபவர் மு∴மினாவார்.
- ஒருவர் தொழ ஆரம்பித்தவுடன் அல்லாஹ் தனது கவனத்தை திருப்பிக் கொள்கின்றான்.
- அந்தந்த நேரத்தில் நிறைவேற்றப்படும் தொழுகையே எல்லாவற்றையும் விட அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானதாகும்.
- உடலுக்கு தலை எவ்வளவு முக்கியமோ அந்த அளவு தீனில் தொழுகை முக்கியமானதாகும்.
- மனிதன் தொழ நின்று விட்டால் அல்லாஹ்வின் அருள் மாரி (ரஹ்மத்) அவன் மீது பொழிகிறது.
- தொழுகை பய பக்தியாளர்களின் தியாகமாகும்.
- அல்லாஹ் கூறுகின்றான் "ஆதாமுடைய மகனே! பகலில் ஆரம்பத்தில் நான்கு ரக் அத் தொழுவதில் அசட்டையாக இருக்காதே. ஏனென்றால் (அதன் காரணமாக) அன்றைய நாள் முழுவதும் உன்னுடைய வேலைகளை நான் கவனித்துக் கொள்கிறேன்."

- அ.இ.ஷாமா
-கிண்ணியா

# அருட்கொடைகளில் மிகச் சிறந்தது சுவனமே!

மனிதனைப் படைத்த அல்லாஹ் அவன் நல்லது எது தீயது எது எனப் பிரித்தறிந்து செயல்படுகின்றானா? என்பதைச் சோதிப்பதற்காக அவன் மீது ஒரு பொறுப்பைச் சுமத்தியுள்ளான். அதனை பின்வரும் திருமறை வசனத்தின் மூலம் விளங்க முடிகின்றது. "உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்ப்தைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான். மேலும் அவன் (யாவரையும்) மிகைத்தவன் மிகமன்னிப்பவன்." (67:1.2)

இதனை மறந்து இன்று மனிதர்கள் இவ்வுலகில் காணப்படும் கணக்கிட முடியாத அல்லாஹ்வின் அருட்கொடைகளையே தனது இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இஸ்லாத்தின் வழிகாட்டல் அவ்வாறானதல்ல. இந்த அருட்கொடைகளைப் பயன்படுத்தி சுவனம் என்ற மகத்தான அருட்கொடையை அடைய வேண்டும் என்பதாகும்.

"ஒரு மனிதர் யாஅல்லாஹ் நான் உன்னிடத்தில் முழுமை பெற்ற பூரண அருட்கொடையை கேட்கின்றேன் என்று பிரார்த்திப்பதை செவிமடுத்த நபி(ஸல்) அவர்கள் அவரிடம் முழுமையான அருட்கொடை என்றால் எது என்று உமக்குத் தெரியுமா? என வினவினார்கள். அதற்கு அம்மனிதர் நான் நல்லவற்றை ஆதரவு வைத்து பிரார்த்தனை புரிந்தேன் என்றார். அதன் பின் நபி(ஸல்) அவர்கள் முழுமை பெற்ற அருட்கொடை என்பது சுவனத்தில் நுழைதலும் நரகத்தை விட்டு விடுதலையாவதுமாகும் என்றார்கள். (நூல் : திருமிதி)

இந்த நபி மொழியை எடுத்து நோக்கினால் வெற்றி என்பது இவ்வுலகில் கிடைக்கும் அருட்கொடைகளை 'ஏணியாகப் பயன்படுத்தி மகத்தான அருட்கொடை என நபியவர்கள் சுட்டிக்காட்டி இருக்கும் சுவனத்தை அடைவதே என்பது திண்ணமாகிறது. அந்த பாரிய வெற்றிக்கான வழிவகைகளை அல்குர் ஆனின் நிழலில் ஒவ்வொன்றாக அவதானிப்போம்.

**ஈமான் கொள்தல்**

இது வெற்றிப் பயணத்தின் அடிப்படையாகும். இது இல்லாமல் அதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் கானல் நீராகிவிடும். ஈமான் இல்லாத எந்த மனிதனும் கவனத்தில் நுழைய முடியாது. மு∴மின்கள் மட்டுமே சுவர்க்கத்தின் சொந்தக்காரர்கள் என்பதை பின்வரும் நபிமொழி மூலம் விளங்க முடியும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : (மறுமையில் விசாரணைகள் முடிந்த பின்) சுவர்க்க வாசிகள் சுவர்க்கத்திலும் நரக வாசிகள் நரகத்திலும் நுழைந்து விடுவார்கள். பின்னர் உள்ளத்தில் கடுகளவேனும் ஈமான் இருப்பவரை நரகத்திலிருந்து வெளியேற்றி விடுங்கள் என்று அல்லாஹ் கட்டளையிடுவான். உடனே அவர்கள் கறுத்தவர்களாக அதிலிருந்து வெளியேற்றப்பட்டு நஹ்நல் ஹயாத் என்ற ஆற்றில் போடப்படுவார்கள். அவ்வாறு அவர்கள் அந்த ஆற்றில் போடப்பட்டதும் பெருவெள்ளம் பாயும் ஓடைக்கரையில் வித்துகள் முளைப்பது போல் பொலிவடைவார்கள். (நூல் : புஹாரி)

**இறையச்சம்**

சுவனத்தை அடைந்து கொள்வதற்கு இன்னுமொரு முக்கிய சாதனம் இறையச்சம் தான் என்பதை இறை விசுவாசிகள் அழைத்து பின்வரும் விதத்தில் விதந்துரைத்துள்ளார்.

மு∴மின்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவன் பால் நெருங்குவதற்குரிய வழியை (வணக்கங்களின் மூலம்) தேடிக் கொள்ளுங்கள் அவனுடைய பாதையில் போர் புரியுங்கள். அப்பொழுது நீங்கள் வெற்றி பெறலாம். (5:35)

**அல்லாஹ்வை திக்ர் செய்தல்**

இதுவும் வெற்றிக்கான காரணிகளுள் முக்கியமான ஒன்றாகும். அத்தோடு இது ஒரு பாரிய விடயமும் அன்று. நாம் ஓய்வாக இருக்கின்ற வேளையில் மனதை ஒற்றுமைப்படுத்தி அல்லாஹ்வை ஞாபகப்படுத்த வேண்டும். இதனை இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் (போரில் எதிரியில்) கூட்டத்தாரைச் சந்திப்பீர்களாயின் உறுதியாக இருங்கள். அல்லாஹ்வை அதிகமாக தியானம் செய்யுங்கள் நீங்கள் வெற்றியடைவீர்கள். (8:45)

எனவே நாம் மேற்கூறிய விடயங்களை நம் வாழ்வில் செயற்படுத்துவதன் மூலம் நாம் அல்லாஹ்வின் அருளாகிய சுவனத்தை அடைய முடியும்.

- மன்சூர் றஸ்லான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES



### இலங்கை விமான சேவையை பிணை எடுத்தது திறைசேரி

ஸ்ரீலங்கன் விமான சேவையால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய பல பில்லியன் ரூபாய்கள் எரிபொருள் கொள்வனவு நிலுவையை செலுத்துவதற்காக திறைசேரி முறிகள் ஊடாக பணத்தைத் திரட்ட மத்தியவங்கி முயற்சி செய்கிறது.

சுமார் 36பில்லியன் ரூபாய்கள் கடன்பட்டுள்ள ஸ்ரீலங்கன் விமான சேவை இலங்கையில் பெருமளவு நட்டத்துடன் இயங்கும் அமைப்புக்களுள் ஒன்றாகக் காணப்படுகிறது. இந்த 36 பில்லியன் கடனைத் தீர்ப்பதற்கு ஸ்ரீலங்கன் விமானசேவையால் முடியாதிருப்பதால் அத்தொகையில் 25 பில்லியன் ரூபாய்களை திறைசேரி தான் பெறவுள்ள கடனின் ஊடாக அடைக்க முயற்சிக்கின்றது.

இவ்வளவு நட்டமடையும் ஸ்ரீலங்கன் விமான சேவை இவ்வாண்டின் ஆரம்பத்தில் 315 பில்லியன் ரூபாய்களுக்கு புதிய விமானங்களைகொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கன் விமான சேவையிடமிருந்தான 36 பில்லியன் ரூபாய்கள் கடன் தொகையை திரட்டிக் கொள்வதற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் வருடமீறாக மேற்கொண்ட முயற்சிகளுக்கு திறைசேரியே தடைகளை ஏற்படுத்தியிருந்தது.

### இலங்கைக்கு எதிரான ஐரோப்பிய நாடுகளிலிருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுமதிக்க மாட்டோம்

இலங்கைக்கெதிரான பரப்புரைகளை மேற்கொண்டு வரும் ஐரோப்பிய நாடுகளின் கண்காணிப்பாளர்களை வடமாகாண சபைத் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுத்த அனுமதிக்கப் போவதில்லை என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கெதிராக வாக்களித்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் கண்காணிப்பாளர்களாக இலங்கைக்குள் வருவதை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று தாம் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். இதனால் தென் ஆசிய மற்றும் ஆசிய தேர்தல் கண்காணிப்பக அதிகார சபைகளிலிருந்தே கண்காணிப்பாளர்களை அனுமதிக்கும் முடிவை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

### இலங்கை ஆசிரிய சேவையிலிருந்து மாயமாகும் ஆசிரியர்

இலங்கை ஆசிரிய சேவையிலுள்ள ஆசிரியர்கள் வயதடையும் முன்னரே இளைப்பாற்றலை அறிவித்துவிட்டு சர்வதேச பாடசாலைகளுக்கும், வெளிநாட்டுப் பாடசாலைகளுக்கும் நியமனங்களைப் பெற்றுச் செல்வதாக தெரிய வருகின்றது.

இதனால் கல்விச் சேவை கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

தற்போது ஆசிரிய சேவையிலுள்ள சுமார் 217,000 ஆசிரியர்களுள் 100,000 ஆசிரியர்களுக்கான முறையான பதவியேற்றம் தற்போது வரை வழங்கப்படாதிருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியைகள் 20 வருடங்களை பூர்த்தி செய்தால் இளைப்பாறலாம் என்பதால் விறள் மிக்க ஆசிரியைகள் 20 வருடங்களை பூர்த்தி செய்த பின் இளைப்பாற்றலை அறிவித்துவிட்டு சர்வதேச பாடசாலைகளில் இணைந்து கொள்கின்றார்கள் என ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்தார்.

### தூங்குகிறது மத்தளை

தூங்கி வழியும் மத்தளை விமான நிலையத்திற்கு மேலும் விமானங்களை வரச்செய்வதற்காக ஏற்கனவே வழங்கப்பட்ட மேலதிகமான சலுகைகளை அரசு வழங்க முன்வந்துள்ளது.

கையாள்கைச் செலவினை குறைத்தும் கழிவுகளை வழங்கியும் அரசு அண்மையில் அறிவித்தல்களை விடுத்திருந்தது.

தரையிறங்கும் மற்றும் நிறுத்திவைக்கும் கட்டணங்களில் 50வீத கழிவை இவ்வருடம் முழுவதும் அறிவித்திருந்த அரசு இச்சலுகையை அடுத்த வருடம் மார்ச் மாதம் வரைக்கும் நீடித்துள்ளது.

அத்துடன் சர்வதேச விமானங்கள் தரையிறங்குவதற்காகச் செலுத்தும் 250 டொலர் கட்டணத்தையும் அரசு நீக்கியுள்ளது.

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

### பா.தெ.குழுவை த.தே.கூ புறக்கணித்தது மிகத் தவறானது

த.தே.கூ வின் மேற்போந்த முடிவானது அவர்களது அரசியல் வரலாற்றில் மிகப்பெரும் தவறாக உள்ளது என இளைஞர் விவகார திறன் விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இலங்கையின் கட்டுக்குள் த.தே.கூவின் அரசியல் அடங்குவதில்லை என தெரிவித்த அவர் அக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களுக்காக அவர்கள் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

### "களம் மக்கறே" இன் உண்மை நிறம் வெளிப்பட்டது.

யுத்தக் குற்ற நீதிமன்றத்தின் முன் மஹிந்த ராஷபக்ஷ வும் ஏனைய யுத்தக் குற்ற வாளிகளும் நிறுத்தப்படும் வரை தான் தூங்கப் போவதில்லை என சனல் - 4 ஒளிபரப்பின் இயக்குநர் களம் மக்கறே தெரிவித்துள்ளார்.



கனேடிய தமிழ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த கூட்டத்திலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார். இத் தமிழ் கலாசார நிலையமானது புலிகளின் நிலையங்களில் ஒன்றாகும். அந்நிலையம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டு பேசிய போது "அந்த நாள் மிகத் தொலைவில் இல்லை". எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகம் முழுவதும் உள்ள விடுதலைப்புலிச் செயற்பாட்டாளர்களே இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். இக்கூட்டத்தில் பாதுகாப்புச் செயலாளர் மீதும் கடும் விமர்சனங்கள் எழுந்ததாகத் தெரிகிறது.

### உயர்தரப் பரீட்சையைக் குழப்புபவர்கள் கைது செய்யப்படுவார்கள்

க.பொ.த உயர்தரப் பரீட்சையைக் குழப்பும் அரசியல் வாதிகளைக் கைது செய்யும்படி காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. மாகாண சபைத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் ஆகஸ்ட் 5ம் திகதி தொடக்கம் 31 வரை வேட்பாளர்கள் வீடு வீடாகச் செல்வதும் ஒலிபெருக்கிகளை அலறவிடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. இவ் உத்தரவை கடுமையாகக் கடைப்பிடிக்குமாறு தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

### கித்துல்கலவில் புதிய நீர்மின் நிலையம்

35மெகா வோல்ட் மின்சாரத்தை உருவாக்கக் கூடிய நீர்மின் திட்டமொன்றை இலங்கை அரசு ஆரம்பித்து வைத்துள்ளது.

இதற்கான 82மில்லியன் அமெரிக்க டொலர்களை சீன அரசும் 3மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையும் முதலீடு செய்யவுள்ளது.

## The Sunday LEADER

### அரசு அனுமதித்த இடத்திலேயே பள்ளிவாசல் உள்ளது.

கிறான்ட்பாஸில் உள்ள பள்ளிவாசல் சட்டவிரோதமாக கட்டப்பட்டது என்ற கோசத்துடன் சிங்கள ராவய அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பார்ப்பாட்டத்திற்கு எவ்வாறு காவல்துறை அனுமதியளித்தது என்ற கேள்வி மக்களிடையே பரவியுள்ளது.

இலங்கை முஸ்லீம்களின் சங்கத்தின் கூற்றுப்படி புத்த சாசன சமய விவகார அமைச்சின் அனுமதியைப் பெற்றே பள்ளிவாசல் அவ்விடத்தில் கட்டப்பட்டுள்ளது என்பது தெரிய வந்துள்ளது.

கடந்த புதன்கிழமை கிறான்ட்பாஸில் கட்டப்பட்டு வரும் இப்பள்ளிவாசலை முற்றுகையிட்ட சிங்கள ராவய அமைப்பினர் அது ஒரு சட்டவிரோத கட்டடம் என ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

1960ம் ஆண்டில் கட்டப்பட்ட கிறான்ட்பாஸ் பள்ளிவாசல் ஆனது நகர அபிவிருத்திக்காக 15அடி உள்வாங்க வேண்டியிருந்ததால் உடைக்கப்பட்டது.

அதனால் அவ்விடத்தில் உள்ள முஸ்லீம்கள் தொழுகையை மேற்கொள்ள முடியவில்லை. புனித ரமழான் மாதத்தை ஒட்டி முஸ்லீம்கள் தொழுகையை நிகழ்த்துவதற்கு உடைக்கப்பட்ட பள்ளிவாசலில் இயலாது போனதால் தற்காலிக இடமொன்றில் தொழுகை ஒன்றை நிகழ்த்த முற்பட்ட போதே இத்தற்காலிக இடத்தை முற்றுகையிட்ட சிங்கள ராவய அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் இத்தற்காலிக இடத்தில் தொழுகையை நிகழ்த்துவதற்கு அரச அனுமதி கிடைத்திருந்தது என முஸ்லீம்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

### தேர்தலின் போது இராணுவம் வெளியே வரக்கூடாது.

வட மாகாணசபைத் தேர்தல் காலத்தில் வட மாகாணத்திலுள்ள இராணுவத்தினர் அவர்களது முகாம்களிலேயே இருக்க வேண்டும் என தேர்தல் ஆணையாளரை த.தே.கூ கேட்டுள்ளது. கடந்த வெள்ளிக் கிழமை தேர்தல் ஆணையாளருக்கும் அரசியற்கட்சிகளின் பொதுச் செயலாளருக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இவ்வேண்டுகோளை த.தே.கூ முன் வைத்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக கருத்தளித்த பவ்ரல் அமைப்பின் செயலாளர் இராணுவம் தேர்தல்களில் தலையிடுவதைத் தடுப்பதற்காகவே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

### பொதுநலவாய மாநாட்டுத் தகவல்கள் ஊடகத்துறை அமைச்சிடமே

பொதுநலவாய தலைவர்களின் கூட்டத்தின் போதான ஊடக நடவடிக்கைகள், இலங்கை அரசாங்கமே மேற்கொள்ளும் என ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுநலவாய தலைவர்களின் கூட்டத்தொடரின் சர்வதேச ஒளிபரப்பு நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானத்தை பொதுநலவாயச் செயலகமே முடிவாக மேற்கொள்ளும் என அச்செயலகத்தின் பேச்சாளர் 'ரிச்சர்ட் உகு' கடந்தவாரம் தெரிவித்திருந்தார். எனினும் இத்தீர்மானம் அக்கூட்டத்தை நடத்தும் நாட்டின் ஒற்றுமையுடனேயே நிகழ்த்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். ஏனெனில் பொதுநலவாய தலைவர்களின் கூட்டத்தொடருக்காக வருகை தரும் ஊடகவியலாளர்களுக்கு உள்வரும் அனுமதியினை அந்தந்த நாடுகளே வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### நில உரிமையாளர்களுக்காக நீதிமன்றம் செல்லும் சட்டவியலாளர் சங்கம்

வடமாகாண நில உரிமையாளர்களுக்காக இலங்கை சட்டவாளர் சங்கம் (Bar Association of Srilanka) நீதிமன்றம் செல்லவுள்ளதாக தெரிகிறது.

வட மாகாணத்தில் இராணுவத் தேவைகளுக்காக நிலச் சுவீகரிப்பில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கையை தடுத்து நிறுத்தக் கோரி சுமார் 300 நில உரிமையாளர்கள் சட்டவாளர் சங்கத்தை அனுகியுள்ளனர்.

இக்கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலித்துள்ள சட்டவாளர் சங்கம் இந்நடவடிக்கைக்கு எதிராக இலவசமாக நீதிமன்றத்தில் வாதாடவுள்ளதாக தெரிவித்தது. இம்முடிவை சட்டவாளர் சங்கத்தின் நிறைவேற்றுச்சபை தனது எதிர்வரும் கூட்டத்தில் ஆமோதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகளவு புற்றுநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகும் இலங்கையின் இளைஞர்கள்

இலங்கையில் இளையோரிடையேயும் சிறுவர்களிடையேயும் புற்றுநோய்த் தாக்கம் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2001ல் இளம்வயதினரில் 8063 பேரைப் பாதித்திருந்த புற்று நோய் 2012ல் அதே வயதுப் பரம்பலிலுள்ள 10,386 பேரைத் தாக்கியுள்ளது. இதே விகிதத்தில் குழந்தைகளிலும் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதென தேசிய புற்றுநோய் திட்ட கட்டுப்பாட்டு ஆலோசகர் வைத்தியர் சுராஜ் பெரேரா தெரிவித்தள்ளார்.

இதேவேளை இலங்கைக்குத் தேவைப்படும் 6 வகையான புற்றுநோய்த் தடுப்பு மருந்துகள் தட்டுப்பாடாக இருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.



## பரீட்சை வினாத்தாள்களில் குளறுபடி

### உயர்தர 2ம் தவணைப்பாட மீள் பரீட்சைக்கு வலயகல்விப் பணிப்பாளர் உத்தரவு

திருகோணமலை கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட 2ம் தவணைப் பரீட்சை வினாத்தாள்களில் உயர்தரப் பிரிவுப் பாடங்களில் குளறுபடிகள் நடந்துள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

விசேடமாக கலை மற்றும் வர்த்தகப் பாடங்களின் வினாத்தாள்களிலேயே குளறுபடிகள் இடம் பெற்றுள்ளன.

உயர் தர தமிழ்ப்பாட வினாத்தாளின் பகுதி 1லும் பகுதி 2லும் இலக்கணக் கேள்விகள் இடப்பட்டிருப்பதாக தெரிவித்த ஆசிரியர்கள் பகுதி 1ல் மட்டுமே இலக்கணக் கேள்வியும் கட்டுரைக் கேள்வியும் கேட்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பகுதி 2லும் இலக்கணமும் கட்டுரையும் கேள்வகளாகக் கோர்க்கப்பட்டிருந்தன.

மேலும் வர்த்தகப் பிரிவில் கணக்கீடு பாடத்தில் கேட்கப்பட்ட கேள்விகள் பல ஆண்டுக்கு முற்பட்ட பாடவிதானத்திலிருந்து எடுக்கப் பட்டவைகளாக இருந்ததாகவும் வணிகக் கல்விப் பாடத்திலும வினாக்கள் 2ம் தவணைப் பாடவிதானத்திற்குட்பட்டு இருக்கவில்லை என்றும் ஆசிரியர்கள் கவலை தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர் பொருத்தமான மீள் பார்வையின் பின் தேவையான பாடங்களுக்கு மறு பரீட்சையை நடாத்துமாறு சம்பந்தப் பட்டவர்களுக்குக் கடுந்தொனியில் கட்டளை இட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

## புதிய அவுஸ்திரேலிய அரசும் அகதிகளை நாட்டுக்குத் திருப்பியனுப்புவதில் உறுதி

2012ம் ஆண்டில் அவுஸ்திரேலிய அரசு எடுத்த முடிவையே அகதிகளின் விடயத்தில் தாமும் பின்பற்றப் போவதாக உறுதிபடத் தெரிவித்துள்ளது புதிய பிரதம மந்திரியின் தலைமையிலான கூட்டரசாங்கம்.

விசேடமாக இம் முடிவு இலங்கையர்கள் தொடர்பாகவே எடுக்கப்பட்டது என்பது கவனத்திற்குரியது.

2010ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவின் படி அகதி அந்தஸ்த்து கோரி அவுஸ்திரேலியாவிற்குள் நுழைந்த அனைத்து இலங்கையர்களும் மீள இலங்கைக்கே திருப்பி அனுப்படுவார்கள்.

அவர்களது அகதி அந்தஸ்த்துக் கோரிக்கை விண்ணப்பங்களைப் பரிசீலனைக்குக் கூட எடுக்காமல் அவர்கள் திருப்பியனுப்பப்படுவார்கள்.

இவ்விடயம் தொடர்பாக ஏபிசி செய்திச் சேவைக்கு கருத்தறிவித்த குடிவரவுத் துறையின் பேசவல்ல அதிகாரியான ஸ்கொட் மொரிசன் "அனைத்துப் புகலிடக் கோரிக்கையாளர்களையும் அவர்களது சொந்த நாட்டுக்கே திருப்பியனுப்புவது என்னும் எமது முடிவில் நாம் உறுதியாக இருக்கின்றோம்'' என்று தெரிவித்துள்ளார்.



எனினும் தமிழ் அகதிகள் சம்மேளனமும் ஏனைய தமிழ் அமைப்புக்களும் இம்முடிவை வன்மையாகக் கண்டனம் செய்துள்ளன.

" இலங்கையில் இருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் நாளாந்தம் கடும் துன்பங்களை அனுபவித்துவரும் இவ் வேளையில் புகலிடக் கோரிக்கையாளரின் விண்ணப்பங்களைக் கூட பரிசீலிக்காமல் அவர்களைத் திருப்பி அனுப்ப முயற்சிப்பது பாரதூரமான ஒரு மனித உரிமை விடயம்" ஆகும் என தெரிவித்துள்ள தமிழ் அகதிகள் சம்மேளனத்தில் பேசவல்ல அதிகாரி ''இலங்கையில் நடைபெறும் துன்புறுத்தல்கள், கடத்தல்கள், சட்டவரைமுறைக்கப்பாற்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அவுஸ்திரேலிய அமைப்புக்களும் தெரிந்துகொண்டிருக்கின்றன" என்று மேலும் தெரிவித்தார்.

என்றாலும் அவுஸ்திரேலிய அரசின் குடிவரவுக் கௌ்கை கடுமையானதாகவே இருக்கும் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### அதிகரிக்கும் சிசுக் கொலைகள்

## பிறந்து சில நாட்களே ஆன குழந்தையைக் கொன்று புதைத்த தாய்

அம்பாறை மத்திய முகாம் பகுதியில் 06ம் இலக்கக் கிராம சேவையாளர் பிரிவில் பிறந்து சில நாட்களே ஆன குழந்தையைத் தாய் கொன்று புதைத்துள்ளார்.

அப் பிரதேச வீடொன்றில் தனியாக வசித்து வந்த பெண்ணொருவரே ஜுலை மாதம் 15ம் திகதி தனக்குப் பிறந்த குழந்தையைத் தனது வீட்டின் வளவிற்குள் புதைத்த விடயம் காவல்தறைக்குத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைகளில் இருந்து வெளித் தெரியவந்துள்ளது.

அதைத் தொடர்ந்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. தலத்திற்கு நேரில் வருகை தந்த கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சிசுவின் சடலத்தைப் பார்வை யிட்டதுடன் பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டுள்ளார்.

### இலஞ்சக் குற்றத்தில் காவல்துறை அதிகாரி!!!

## குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி கைது

திருகோணமலை காவல்துறைத் தலைமையக குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், பிரிதொரு நபரிடமிருந்து பத்தாயிரம் ரூபாவினை இலஞ்சமாகப் பெறும் போதே கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்ததாக தமிழ்மிரர் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.


மலைமுரசு

MALAIMURASU

பத்திரிகைக்கு மாணவப் பத்திரிகையாளர்கள் தேவை

பகுதிநேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ செய்தியாளர் ஆகலாம்

மூன்று மாதப் பயிற்சியின் பின் கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் தரகினை உழைக்க முடியும்

தொடர்பு - இல 159A,
இரண்டாம் மாடி,
திருகோணமலை

0777 555 738
075 42 32 042


## திருமலை வளாக...

பெரும் கவலையைத் தோற்றுவிப்பதாக கல்விச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும்காலங்களில் தனிப் பல்கலைக்கழகமாக மாற்றமடையும் வாய்ப்பைக் கொண்டுள்ள திருமலை வளாகத்தினை இராசரட்டைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதால் அந்த எதிர்காலக் கனவு சின்னாபின்னமாகிவிடும் என்பதே, கண்கூடு. கடல் வளக் கற்கைகளுக்கான பல்கலைக்கழகமாக உருவாகக் கூடிய திருகோணமலை வளாகம் கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து நிர்வாக ரீதியாக வேறு எப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பதற்குப் பூகோள அமைவிடக் கருத்தியலும் இடம் கொடாது எனத் தெரிவித்த திருமலைக் கல்வியியலாளர்கள் இந் நடவடிக்கையைக் கடுமையாக எதிர்ப்பதாகத் தெரிவித்தனர்.

எனினும் இவ்விடயம் தொடர்பாக வளாக முதல்வரை நாம் தொடர்புகொண்ட போது தற்போதுவரை இவ்விடயம் தொடர்பான அலுவலகத் தொடர்பாடல்கள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அதனால் இவ்விடயம் தொடர்பாக முடிந்த முடிவு எதனையும் கூற முடியாது என்றும் தெரிவித்தார்.

ஆனாலும் கடந்த ஞாயிற்றுக் கிழமை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் புதுமுக மாணவர்களின் வரவேற்பு வைபவத்திற்கு திருமலை வளாகத்திகு வந்திருந்த போது வளாக முதல்வருடன் இவ் விடயம் தொடர்பாக கருத்து முரண்பட்டதாகவும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமலை வளாகத்தில் தற்போது பிரயோக விஞ்ஞானம், தொடர்பாடலும் வணிகக் கற்கைப் பீடங்களும் சித்த மருத்துவ கற்கை அலகும் தொழிற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org